வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 13.02.2023 திங்கட்கிழமை | இதழ் : 66 | பக்கங்கள் : 16

# தேர்தலை தாமதமாக்கும் நிறுவனங்கள்மீது வழக்கு!

## தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை



கொழும்பு, பெப்ரவரி 13

**மார்ச் 9ஆம் திகதி திட்டமிட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எமது முயற்சிகளுக்கு திறைசேரி மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் ஒத்துழைக்கத் தவறினால் அவற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு தொடருவோம் என்று தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

தேர்தல் நோக்கங்களுக்காக திறைசேரியிலிருந்து மெதுவாகவே நிதி வழங்கப்படுகின்றது. பெப்ரவரி இறுதிவரை தேர்தல் செலவுக்காக 80 கோடி ரூபாயை தேர்தல் ஆணைக்குழு கேட்டுள்ளது. ஆனால், 10 கோடி ரூபாயே வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேற்படி எச்சரிக்கையை விடுத் துள்ளார்.

தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி விடுவிக்கப்படவில்லை. தேர்தல் அதிகாரிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதுவும் செய்யப்படவில்லை. அரசமைப்பு சட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் திறைசேரி உள்ளிட்ட அரச நிறுவனங்கள் எவையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு

15



# நெல்லின் கொள்விலை கிலோவுக்கு 100 ரூபாய்

## ஜனாதிபதி உறுதிமொழி

கிளிநொச்சி, பெப். 13

ஒரு கிலோ நெல்லை 100 ரூபாய் வீதம் கொள்வனவு செய்வதற்கான பொறிமுறையை ஒரு வாரத்துக்குள் அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என்று கிளிநொச்சி விவசாயிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பரந்தனில் நேற்று நடை பெற்ற நெல் அறுவடை நிகழ்விலேயே ஜனாதிபதி இதனை தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

15

# சுற்றுலா சென்ற நால்வர் குளத்தில் மூழ்கி மரணம்!

## மட்டக்களப்பில் நேற்று சோகம்

மட்டக்களப்பு,பெப். 13

சுற்றுலா சென்றபோது படகில் பயணித்த மூன்று மாணவர்களும் அவர்களை காப்பாற்ற முயன்ற ஆசிரியருமாக நால்வர் குளத்தில் மூழ்கி உயிரிழந்தனர்.

இந்த சோக சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை மட்டக்களப்பு தாந்தாமலை - நாற்பது வட்டை குளத்தில் இடம்பெற்றுள்ளது.

தனியார் கல்வி நிலையத்தின் ஆசிரியர் ஒருவரும் க. பொ. த. சாதாரண தரத்தில் பயிலும் 3 மாணவன்களும் 4 மாணவிகளுமாக தாந்தாமலை பகுதிக்கு சுற்றுலா சென்றுள்ளனர்.

3 மாணவர்களும் கரையிலிருந்த படகை எடுத்துக் கொண்டு குளத்தின் நடுவே சென்றனர். அச்சமயம்,

15

# இனப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு கூட்டுப் பொறிமுறை அவசியம்!

## இந்திய அமைச்சரிடம் சிறீதரன் வலியுறுத்து

கிளிநொச்சி, பெப். 13

இனப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வை எட்டுவதற்கான தீர்வுப்பொதியை இறுதி செய்ய வடக்கு, கிழக்கு, தமிழகம், புதுடில்லி, புலம்பெயர் தேசங்கள் ஆகிய தரப்புகளை உள்ளடக்கிய கூட்டுப்பொறிமுறை ஏற்படுத்தப்படுவது அவசியம் என்று இலங்கை தமிழரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இந்திய இணையமைச்சர் முருகனிடத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய மீன்வளங்கள் இணை அமைச்சர் எல். முருகன், இந்தியாவை ஆளும் பா. ஜ. க. கட்சியின் தமிழக தலைவர் கு. அண்ணாமலை ஆகியோரை யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசிய போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

இதன்போது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம்தொடர்பாக பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட

15

# 2.5 இலட்சம் குடும்பங்களுக்கு உலக உணவு திட்டம் உதவும்!

கொழும்பு, பெப். 13

பொருளாதார நெருக்கடியால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட 2 இலட்சத்து 44 ஆயிரம் குடும்பங் களுக்கு பெப்ரவரி - மே வரையான காலப் பகுதியில் அவசிய நிதியுதவி வழங்கப்படும் என்று உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

நாட்டின் நெருக்கடியால், உணவு பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிக்கிறது. நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருப்போருக்கு உலக உணவு திட்டம் உதவுகிறது. இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாடளாவிய

15

# தேர்தல் திணைக்களத்துக்கு 10 கோடி ரூபாய் விடுவிப்பு!

கொழும்பு, பெப். 13

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு திறைசேரி 10 கோடி ரூபாயை வழங்கியுள்ளது.

இந்த நிதி கிடைத்தமையை தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க உறுதிப் படுத்தியுள்ளார்.

திட்டமிட்டபடி மார்ச் 9ஆம் தேதி தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் இதன்போது அவர் கூறினார்.

இதேவேளை, தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் பெப்ரவரி 22, 23 மற்றும் 24 ஆம் திகதி களில்

15

# பிரதமர் பதவி விடயத்தில் கட்சியின் முடிவை ஏற்பேன்!

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, பெப். 13

பிரதமர் பதவி விவகாரத்தில் கட்சியின் முடிவை தலை வணங்கி ஏற்பேன் என்று தெரிவித்திருக்கிறார் முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க வேண்டும் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியினர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இந்த விடயம் தற்போது பரவலாகி வருகிறது.

இந்த நிலையில், தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு பிரதமர் பதவி விவகாரம் குறித்து மகிந்த ராஜபக்ஷ கருத்து ஒன்றை வெளியிட்டார்.

15

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023
தமிழ் தேசிய கூட்டமைப்பு
தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

## இப்படியும் நடக்கிறது...!

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

தேர்தலை நடத்த மாட்டோம் என்று இதுவரை யாரும் சொன்னதாகத் தெரியவில்லை. தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் உரிய காலத் தில் செய்துகொண்டுதான் இருக்கின்றது. தேர்தல் நடத்த உத்தரவிடவேண்டும் என்று கோரி பல அரசியல் கட்சிகளின் சார்பில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கிலேயே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், தேர்தலை நடத்தக் கூடாது என்று உத்தரவிடக் கோரி ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் தாக்கல் செய்த வழக்கு எதிர்வரும் இருபத்து மூன்றாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இருபத்தி இரண்டாம் திகதியே தபால் மூல வாக்களிப்பு தொடங்கிவிடும். அநேகமாக தேர்தல் நடைபெறுவது உறுதியாகியிருக்கின்றது. தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதியை இன்னமும் திறைசேரி வழங்கவில்லையே என்ற கேள்வி இருந்தாலும் தேர்தலை எப்படியும் நடத்தவிடுவது என்பதில் தேர்தல் ஆணைக்குழு தீவிரமாக இருக்கின்றது.

நடக்கவிருப்பது உள்ளூராட்சி தேர்தல். இந்தத் தேர்தலுக்காக களத்தில் இருக்கும் ஒவ்வொரு வேட்பாளர்களும் சில நூறு வாக்காளர்களை இலக்குவைத்தே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவிருக்கின்றனர். உதாரணமாக, சுமார் பத்தாயிரம் குடியிருப்புக்களை கொண்ட யாழ்ப்பாணம் மாநகர சபையில், ஒவ்வொரு கட்சியின் சார்பிலும், இருபத்தியெட்டு வட்டாரங்களில் இருபத்தியெட்டு வேட்பாளர்கள் போட்டியிட, மற்றுமொரு பதினேழு வேட்பாளர்கள் பட்டியலில் போட்டியிடுகின்றனர்.

அதனை விட, அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி, ஒரு வாக்காளருக்கு பதினைந்து ரூபாயை மாத்திரமே ஒரு வேட்பாளர் செலவுசெய்யமுடியும். சில ஆயிரம் ரூபாய்களையே ஒவ்வொரு வேட்பாளர்களும் இதற்காக செலவு செய்ய வேண்டியிருக்கும். ஆகக்குறைந்தது, தமது விபரங்கள் அடங்கிய சிறிய துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு அவற்றை வாக்காளர்களுக்கு விநியோகித்தாலே தேர்தல் பிரசாரத்துக்குப் போதுமானதுதான்.

ஆனால், இந்த தேர்தலில் தனது கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவுக்காக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் தமிழ் மக்களிடம் நிதி உதவிக்குக் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

'நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய சிந்தனையும், ஆற்றலும், தூய கரங்களும் கொண்ட இளையோர்களைக் கொண்ட' தனது வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யும் தனது முயற்சிக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு அவர் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

மிகுந்த நிதி நெருக்கடியின் மத்தியில் அநாவசியமான செலவுகளைத் தவிர்த்து எதிர்வரும் தேர்தலை முற்றுமுழுதாக மக்களை நம்பி எதிர்கொள்வதாக தெரிவித்துள்ள அவர், சில அவசியமான செலவுகளைச் செய்வதற்கான நிதி உதவிகளை முடிந்தளவு செய்துதவுமாறு தாயகத்திலும் புலம்பெயர்ந்தும் உள்ள மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தலில் போட்டியிட்டு மக்களுக்கு சேவை செய்ய விரும்புகின்ற அவரின் இளைய வேட்பாளர்கள், தமது தேர்தல் செலவுக்கே - அதாவது சில ஆயிரம் ரூபாய்களுக்கே அதே மக்களிடம் பகிரங்கமாகக் கையேந்தி நிற்கின்றனர் என்றால், அவர்களை எப்படி 'ஆற்றல்' உள்ளவர்கள் என்று விக்னேஸ்வரன் வர்ணிக்கின்றார் என்பது புரியவில்லை.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் விக்னேஸ்வரன் இது போன்ற கோரிக்கையை விடுத்திருந்தார். கூடவே அந்த நிதி உதவி பற்றி பின்னர் பகிரங்கமாகக் கணக்கு விவரங்கள் வெளியிடப்படும் என்றும் தெரிவித்திருந்தார். அப்படியான கணக்கு விவரங்கள் எதுவும் பின்னர் காட்டப்பட்டதாகவும் தெரியவில்லை. சரி, அது பாராளுமன்ற தேர்தல் என்பதால், அவர் தேர்தல் மாவட்டம் முழுவதும் சென்று அறிமுகமே இல்லாத மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யவேண்டியிருந்தது என்பதால், அதனை ஒரு நியாயத்திற்காக விட்டுவிடுவோமே.

ஆனால், தத்தமது சொந்த வட்டாரங்களில், உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் ஆகிய நன்கு நெருங்கிப் பழகிய சில நூறு வாக்காளர்களிடம் சென்று வாக்குக் கேட்பதற்கும் - எவ்வித அறிமுகமும் இல்லாத மற்றவர்களின் கைகளை எதிர்பார்த்திருக்கும் 'மான்' சின்ன கட்சியின் வேட்பாளர்களும் அவர்களின் தலைவர்களும், தேர்தலின் பின்னர் தமது 'ஆற்றலை' எப்படி வெளிப்படுத்தப் போகின்றார்கள் என்பதை கேட்காமல் இருக்க முடியவில்லை.!

**- ஊர்க்குருவி**

## விவசாயிகளிடம் நெல் கொள்வனவு; ரூ. 1000 கோடியை வழங்க அனுமதி!

*கொழும்பு, பெப். 13*

பெரும்போக நெல் கொள்வனவுக்காக மாவட்ட செயலாளர்களுக்கு ஆயிரம் கோடி ரூபாயை விடுவிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மாவட்ட செயலாளர்களுக்கு அடுத்த வாரம் பணம் வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கொள்வனவு செய்யப்படும் நெல் சிறிய ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு அரிசியாக மாற்றப்படும். அதன் பிறகு, அந்த அரிசியை குறைந்த வருமானம் பெறும் 30 இலட்சம் குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு நிவாரணமாக வழங்க அரசு நம்புகிறது.

இதனிடையே, அதிக பருவத்தில் பயிர்களை விற்க முடியாமல் பல மாவட்டங்களில் விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகினர். தனியார் வியாபாரிகள் தங்களது பயிர்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்குவதாக அவர்கள் கூறுகின்றனர். (ஐ)

## நிலநடுக்கங்கள் தொடர்பில் சில தினங்களில் அறிக்கை!

*கொழும்பு, பெப். 13*

நிலநடுக்கங்கள் ஏற்பட்ட புத்தல மற்றும் வெல்லவாய பகுதிகளில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி புத்தள மற்றும் வெல்லவாய பகுதிகளுக்கு அருகில் ரிச்டர் அளவுகோலில் 3.5 என்ற அளவில் இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் வெல்லவாய பிரதேசத்தில் 2.3 ரிசிடர் அளவில் சிறிய நிலநடுக்கம் ஏற்பட்டதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இந்த நிலநடுக்கங்கள் தீவிரமானவை அல்ல என்று நிறுவனம் கூறுகிறது. இந்த நிலநடுக்கங்களைத் தொடர்ந்து, இரண்டு ஆய்வுக் குழுக்கள் நேற்று முன்தினம் அந்தப் பகுதிக்கு களப்பயணம் மேற்கொண்டுள்ளன.

இவர்களின் ஆய்வு சில தினங்களில் நிறைவுக்கு வரும். அதன் பின்னர் அந்த அறிக்கை வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## போக்குவரத்து நெரிசலை குறைக்க மனித உரிமைகள் குழு நடவடிக்கை!

*கொழும்பு, பெப். 13*

நாட்டில் தற்போது நிலவும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான பரிந்துரைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

வாகன விபத்துகளால் ஏற்படும் உயிர்ச்சேதம் மற்றும் வீதிகளில் அதிக வாகன நெரிசல் ஏற்படுவதை கருத்தில்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையில் அண்மையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதுடன், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, போக்குவரத்து திணைக்களம், கொழும்பு வீதிப் போக்குவரத்து அதிகார சபை, பொலிஸ் போக்குவரத்து பிரிவு உள்ளிட்ட பல திணைக்களங்கள் கலந்துரையாடலில் பங்கு பற்றியிருந்தன.

இந்தப் பிரச்சனை குறித்து அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதால் இது தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை 30 நாட்களுக்குள் தங்களுக்கு சமர்ப்பிக்குமாறு மனித உரிமை ஆணைக்குழு விவாதத்தில் பங்கேற்ற அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையை தமது ஆணைக் குழுவிடம் பெற்றுக் கொண்டதன் பின்னர் குறித்த பரிந்துரைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## பொதுஜன பெரமுன கட்சியை ஜனாதிபதி பலவீனமாக்குகிறார்!

### விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

*கொழும்பு, பெப். 13*

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதாக கூறிக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிறீலங்கா பொதுஜன பெரமுனவை பலவீனப்படுத்துகிறார். ஐக்கிய தேசிய கட்சியை தஞ்சமடையச் செய்யும் நிலை பொதுஜன பெரமுனவுக்கு ஏற்படும்.


இப்படிக் கூறியுள்ளார் விமல் வீரவன்ஸ எம். பி.

கடுவலையில் நேற்று இடம்பெற்ற சுதந்திர மக்கள் சபை கூட்டணியின் கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்மானத்தை கௌரவத்துடன் வரவேற்கிறோம். உள்ளூராட்சி மன்றத் தேர் தலை பிற்போடுமாறு தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனு எதிர்வரும் 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஆனால், தபால் மூல வாக்கெடுப்பு எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுமாறு நீதிமன்றம் அறிவிக்காது என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. நாட்டு மக்களின் அடிப்படை உரிமையை பறிக்க அரசாங்கம் முயற்சித்தபோது நீதிமன்றம் அதற்கு எதிராக தடை விதித்து மக்களின் அடிப்படை உரிமையை பாதுகாத்துள்ளது.

தேர்தல் பிற்போடப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார். ஆனால், தேர்தலை பிற்போடும் நோக்கம் ஜனாதிபதிக்கு கிடையாது. மாறாக, தேர்தலை பிற்போடுவதாக கூறிக்கொண்டு சிறீலங்கா பொதுஜன பெரமுனவை பலவீனப்படுத்துகிறார்.



நடைபெறவுள்ள தேர்தலில் பெரமுன படுதோல்வி அடையும். இதை ரணில் விக்கிரமசிங்க தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறார் - என்றார்.

ஈழநாடு
Eelanadu
13.02.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

## மல்கம் ரஞ்சித்தின் தார்மீகம்?

வரலாற்று ரீதியாக இலங்கை இழைத்த தவறுகளின் காரணமாகவே, தற்போது நாடு பெரும் நெருக்கடிகளை சந்தித்திருப்பதாகவும், பொருளாதாரத்தில் மட்டுமல்ல தார்மீகத்திலும் நாடு வீழ்ச்சியடைந்துவிட்டதாகவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்திருக்கின்றார். சிங்கள ஆட்சியாளர்களின் வரலாற்று தவறுகள் இப்போதுதான் மல்கம் ரஞ்சித்துக்கு புரிகின்றதா?

நாடு சுதந்திரமடைந்தாக சொல்லப்படும் காலத்திலிருந்து, இலங்கைத் தீவானது, உள்நாட்டு நெருக்கடிக்குள்தான் இருக்கின்றது. அதிலிருந்து இன்றுவரையில் மீளவில்லை. அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களை கூட, அமுல்படுத்த முடியாதளவிற்கே இந்த நாட்டின் ஆட்சி இருக்கின்றது. உள்நாட்டு யுத்தம் முடிவுற்று பதின்மூன்று வருடங்களாகிவிட்டது. ஆனாலும் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான கேள்விகளுக்கு இன்றுவரையில் பதிலில்லை.

அடிப்படையில் இலங்கையின் மனித உரிமை மற்றும் ஜனநாயகம் தொடர்பான கேள்விகள் அனைத்துமே, தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையுடன் தொடர்பானதாகும். இது தொடர்பில் மல்கம் ரஞ்சித் எப்போதுமே பேசியதில்லை. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் வடக்கு கிழக்கை சேர்ந்த ஆயர்கள் கேள்வியெழுப்பிய போதும், கர்தினால் என்னுமடிப்படையில் மல்கம் ரஞ்சித் ஒருபோதுமே தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்ததில்லை.

சிங்கள கடும்போக்குவாதிகளுடன் முரண்பட்டுக் கொள்ளாத வகையிலேயே தனது செயற்பாடுகளை முன்னெடுத்துவந்தார். இறுதி யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் யுத்தத்தின் பொறிக்குள் அகப்பட்டிருந்த போது கூட, மல்கம் ரஞ்சித் அது பற்றி குரல்கொடுக்க துணியவில்லை. எப்போதும் சிங்கள - பௌத்த சக்திகளோடு சமரசம் செய்யும் ஒரு கத்தோலிக்க தலைவராகவே மல்கமின் செயல்பாடுகள் அமைந்திருந்தன.

ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னர்தான் மல்கம் ரஞ்சித் தார்மீகம் நீதி தொடர்பிலெல்லாம் பேசும் ஒருவராக தன்னை வெளிப்படுத்தினார். அதிலும் முன்னுக்குர் பின் முரண்பாடான அறிக்கைகளை வெளியிட்டார். ஆரம்பத்தில் ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னால் ஒரு சக்திவாய்ந்த நாடு இருப்பதாக கூறியவர் பின்னர், மைத்திரிபால சிறிசேனவின் மீது குற்றம்சாட்டினார். இப்போது நாடு தார்மீகத்தை இழந்துவிட்டதாக கூறுகின்றார். நாடு மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநிநீதிகளின் போது, மல்கம் ரஞ்சித்தும் கூட தார்மீகத்தை இழந்துபோன ஒருவர்தான்.

இப்போதும் கூட பௌத்த மதபீடத்தின், பிக்குகளின் செயல்பாடுகளை கண்டிக்கும், துணிவுள்ள மதத் தலைவராக மல்கம் தன்னை வெளிக்காட்டவில்லை. பொதுவாகவே பேசிவருகின்றார். மற்றவர்களின் தார்மீகம் தொடர்பில் பேசுவதற்கு முன்னர், மல்கம் ரஞ்சித், தன்னுடைய தார்மீகம் தொடர்பில் இனியாவது சிந்தித்தால், அவர் சார்ந்த கத்தோலிக்க திருச்சபைக்கு அவர் செய்யும் நல்ல காரியமாகலாம். மதத் தலைவர்கள் என்போர், சுயநலன்களுக்கு அப்பாற்பட்டு சிந்திப்பவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இலங்கைத் தீவில் அதனை காண முடியவில்லை. பௌத்த மதத்தலைவர்கள் என்போர் தமிழர் வெறுப்பை கக்குவதையே பிரதான மதப் பணியாக கொண்டிருக்கின்றனர். சிலர் விதிவிலக்காக இருக்கலாம். அந்த விதிவிலக்குகள் எப்போதுமே தீர்மானிப்பவர்களாக இருப்பதில்லை.

## இலங்கை தமிழரசு கட்சியின் யாழ். வேட்பாளர்கள் அறிமுகம்!

*யாழ்ப்பாணம், பெப். 13*

*இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர் அறிமுக கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.*

*நல்லூரில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் இந்த கூட்டம் இடம்பெற்றது.*

*கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். (ஐ)*





## 13ஆவது திருத்தச் சட்டத்தால் நாடு நிச்சயம் பிளவடையாது!

**பேராசிரியர் சர்வேஸ்வரன்**

*கொழும்பு, பெப். 13*

*அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாடு பிளவுபடும் என்ற சந்தேகம் நாட்டு மக்கள் இடத்தில் உள்ளது. உண்மையில் 13 ஐ நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாடு நிச்சயம் பிளவுபடாது . ஒற்றையாட்சிக்குள் ஒருபோதும் சமஷ்டிக்கு சாத்தியமில்லை என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பேராசிரியர் அ. சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.*

*13ஐ நடைமுறைப்படுத்துவதன் மூலம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாடு பிளவுபடுவதற்கான ஏற்பாடுகளும் அதில் இல்லை. குறிப்பாக இன்று பலருக்கு 13 ஆவது திருத்தம் தொடர்பில் போதிய அறிவு இன்மையே இதற்கான காரணமாகும். அதாவது இந்த திருத்தத்தில் சகல அதிகாரங்களையும் மத்திய அரசு மீள பெற்றுக்கொள்ள கூடியதாகவும், மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்த கூடியதாகவும் காணப்படுகிறது.*

*மாகாண சபை முறைமையில் முதலமைச்சரை விட அதிகளவு அதிகாரம் கொண்டவராக ஆளுநர் காணப்படுகிறார். அவரை நியமிக்கின்றவர் ஜனாதிபதி. எனவே, ஜனாதிபதி தனக்கு விருப்பமான நபர் ஒருவரையே ஆளுநராக நியமிக்க முடியும்.*


*நாடு பிளவுபட்டு விடும், இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படும், இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் இலங்கை சென்று விடும் அல்லது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இந்தியாவுடன் இணைந்து விடும் என்று பலரும் கூறுகிறார்கள். இந்நிலையில் இந்த 13இல் என்ன இருக்கிறது என்பதுகூட அவர்களுக்கு தெரியாது.*

*குறிப்பாக காணி அதிகாரத்தை எடுத்து கொள்வோமாயின், காணி அதிகாரங்கள் 13 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ளதா? என்பதே ஒரு கேள்வியாகும். இருப்பினும் இது தொடர்பில் முன்னர் சிக்கல் தோன்றி பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நிலையில் அதன் தீர்ப்பு காணி அதிகாரங்கள் 13இற்கு சொந்தமானவையல்ல என்று நீதிமன்றம் தீரப்பு வழங்கியது. மத்திய அரசு காணிகளை மாகாண சபைக்கு வாங்கியிருந்தால் அதை பயன்படுத்த மாத்திரமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இல்லாத ஒன்றை எவ்வாறு ஜனாதிபதி வழங்க போகிறார்? என்பதே எனது கேள்வியாகும்.*

*மேலும் ஒற்றையாட்சிக்குள் சமஷ்டிக்கு சாத்தியம் கிடையாது. இலங்கை என்பது ஒற்றையாட்சி நாடாகும். சமஷ்டி என்பது அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் பகிரப்படவேண்டும். ஆனால் 13ஆவது திருத்தத்தில் பகிரப்படவில்லை.*

*மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றொரு திருத்தத்தை கொண்டு வந்து மீளப் பெற்றுக்கொள்ள முடியும். இங்கு அதிகாரங்கள் பிரிபட வில்லை. ஆனால், சட்டவாக்க அதிகாரம் மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் அடுத்த மட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அது அதிகார பரவலாக்கம் என்று கூறலாமே தவிர அதிகார பகிர்வு என்று கூறமுடியாது - என்றார். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






பெப்ரவரி - 13 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 01
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : அஷ்டமி

**மேடம்**
நிதாஉங்கள் செயலில் இன்று லாபம் ஏற்படும். மகிழ்ச்சியான நாள். நீங்கள் எதிர்பார்த்த செய்தி வரும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை விலகும். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**இடபம்**
எதிர்ப்பு விலகும். குடும்பத்தில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். உங்கள் அணுகுமுறையால் தடைகளை எல்லாம் சரி செய்து முன்னேற்றம் காண்பீர்கள். உடல் நிலையில் இருந்த பாதிப்பு விலகும்.

**மிதுனம்**
குடும்பத்திற்காக மேற்கொள்ளும் முயற்சி நிறைவேறும். மகிழ்ச்சியான நாள். நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கடகம்**
மனதில் தைரியம் உண்டாகும். துணிச்சலுடன் செயல்பட்டு ஒரு முயற்சியில் முன்னேறுவீர்கள். நெருக்கடி நீங்கும். சொத்து விவகாரம் உங்களுக்கு சாதகமாகும்.

**சிம்மம்**
உங்கள் செல்வாக்கு உயரும். செயல்களில் லாபம் அதிகரிக்கும். நன்மையான நாள். நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும். பிரச்னைகளை சரி செய்து புதிய முயற்சியில் ஈடுபடுவீர்.

**கன்னி**
உங்கள் பேச்சுக்கு மதிப்பு அதிகரிக்கும். வரவுகளில் இருந்த தடை அகலும். வியாபாரத்தில் லாபம் காண்பீர்கள். பொருளாதார நிலை உயரும்.எதிர்பார்த்த பணவரவு வரும்.

**துலாம்**
உங்கள் மனம் மகிழும்படியான சம்பவம் இன்று நடைபெறும் நாள். குடும்பத்தினர் நலனுக்கான ஒரு முடிவை துணிச்சலுடன் எடுப்பீர்கள். பணியிடத்தில் உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**விருட்சிகம்**
எதிர்பாராத செலவு உண்டாகும். புதிய பொருட்கள் வாங்கு வீர்கள். வாழ்க்கைத் துணையுடன் அனுசரித்துச் செல்வதால் நன்மை ஏற்படும். குடும்ப உறுப்பினர் ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு**
நிதி நிலையில் இருந்த சங்கடம் நீங்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். உங்கள் தேவை கள் எளிதாக நிறைவேறும். வியாபாரத்தை விரிவு செய்வீர்கள்.

**மகரம்**
தொழிலில் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர்கள். நிம்மதி காணும் நாள்.போட்டியாளர்கள் விலகிச் செல்வர். புதிய முயற்சி நிறைவேறும் நாள். இழுபறியாக இருந்த ஒரு செயல் நிறை வேறும்.

**கும்பம்**
நண்பர்கள் ஆதரவுடன் உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். நிதிநிலை உயரும். நேற்றைய எண்ணம் நிறைவேறும். நீங்கள் எதிர்பார்த்தது தேடி வரும்.

**மீனம்**
பேச்சிலும் செயலிலும் கவனம் தேவை. உங்கள் செயல் உங்க ளுக்கே எதிர்மறையாகும். மற்றவர்களால் சங்கடம் ஏற்படும். நிதானத்துடன் செயல்பட வேண்டிய நாள் புதிய முயற்சி எதுவும் வேண்டாம்.

# இலங்கை - தமிழக மீனவர் பிரச்னை; அரசியல் ரீதியான தீர்வு அவசியம்!

## கனிமொழி எம். பி. தெரிவிப்பு



தூத்துக்குடி, பெப். 13

இலங்கை - தமிழக மீனவர்கள் பிரச்னையில் அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும். தொடந்து அதற்காக குரல் கொடுத்து வருகிறோம். இரு நாட்டு மீனவர்களிடமும் பேச்சு நடத்தி சுமுகமான தீர்வு காண வேண்டும் என தி. மு. கவின் கனிமொழி எம். பி. கூறியுள்ளார் .

தூத்துக்குடி மாவட்டத்தில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“பாராளுமன்றம் என்பது கேள்விகள் கேட்க கூடாத இடமாகவும், பாராட்டு பத்திரங்களை மட்டுமே படிக்கக்கூடிய ஓர் இடமாகவும் மாறிக் கொண்டிருக்கிறது. பாராளுமன்றம் என்பது மக்களுடைய பிரச்னைகள், குறைகளை எடுத்துரைக்கும் ஓர் இடமாக இருக்க வேண்டும். ஆனால், கேள்வி நேரத்தில்கூட மக்கள் பிரச்னைகள் குறித்து பேச முடியாத நிலைதான் பாராளுமன்றத்தில் உள்ளது.

பாராளுமன்றத்தில் எதிர் கட்சிகளும், மக்கள் பிரதிநிதிகளும் பிரதமரை நோக்கி கேள்வி எழுப்பினால் அவர் தரக்கூடிய ஒரே பதில் எதிர்க் கட்சிகளை சாடுவது கேள்வி கேட்பதே தவறு என்பதுபோல் நையாண்டி செய்வது, அச்சுறுத்துவது போல் பேசுவது. ஆனால், கடைசிவரை பாராளுமன்றத்தில் கேட்கப்படும் எந்த கேள்விக்கும் உருப்படியான பதில் யாரிடமிருந்தும் வராது என்பதுதான் உண்மை என பல்வேறு குற்றசாட்டுகளை முன் வைத்தார்.

தமிழ் மக்களுக்கு எதிராக இருக்கக்கூடிய பா. ஜ. க. ஆதரவளிப்பவர்களுக்கு மக்கள் வாக்களிக்கமாட்டார்கள். தமிழ்நாட்டு மக்கள் உரிமைக்காக போராடக்கூடிய தி. மு. க. ஆதரவளிக்கும் காங்கிரஸ் கட்சிக்குதான் வெற்றி கிடைக்கும்.

(ஐ)

# ஜார்க்கண்ட் ஆளுநராக ராதாகிருஷ்ணன் நியமனம்



புதுடில்லி, பெப். 13

ஜார்க்கண்ட் மாநிலத்தின் புதிய ஆளுநராக என்னை நியமித்திருப்பது தமிழகத்துக்கு மத்திய அரசு அளித்திருக்கும் இன்னொரு பெருமை என சி. பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்திய குடியரசு தலைவர் திரௌபதி முர்மு 13 மாநிலங்களுக்கான ஆளுநர்களை நியமித்து உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, ஜார்க்கண்ட் மாநில ஆளுநராக ரமேஷ் பயாஸ் பணியாற்றி வந்த நிலையில், அந்த பதவியில் பா. ஜ. க. தேசிய செயலாளரான சி. பி. ராதாகிருஷ்ணன் நேற்று நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு பா. ஜ. கவின் தலைவராக இருந்துள்ள சி. பி. ராதாகிருஷ்ணன், இரண்டு முறை கோவை தொகுதி மக்களவை உறுப்பினராக பதவி வகித்துள்ளார்.

இதேவேளை, “பா. ஜ. கவின் முன்னாள் மாநில தலைவர் அன்பிற்குரிய அண்ணன் சி. பி. ராதாகிருஷ்ணன் ஜார்க்கண்ட் ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பது மிகுந்த மன மகிழ்ச்சி அளிக்கிறது. அவரின் தேச நலப் பணிகள் மென்மேலும் சிறக்க மனமார வாழ்த்துகிறேன்” என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு நீதிமன்றில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லை!

## திருமாவளவன் குற்றச்சாட்டு



சென்னை, பெப். 13

உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றங்களில் ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் விமர்சித்துள்ளார்.

திராவிட கழக தலைவர் கி.வீரமணி தலைமை தாங்கிய இந்த ஆர்ப்பாட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த வீரபாண்டியன் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் பங்கேற்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தில், நீதிபதி நியமனங்களில் இட ஒதுக்கீடு தேவை என கோரி முழக்கம் எழுப்பப்பட்டது.

அதைத் தொடர்ந்து மேடையில் திருமாவளவன் பேசியதாவது: உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்றங்களில் ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு பிரதிநிதித்துவம் இல்லை. இது எவ்வளவு பெரிய அநீதி என்பதை நாம் உணராமல் உள்ளோம். இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் திராவிட இயக்கங்கள் விமர்சிப்பத்தை சிலர் கடமையாக செய்து வருகிறார்கள். இது கவலை அளிக்கிறது.

உச்ச நீதிமன்றத்தில் மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 34, அதில் 30 பேர் உயர்சாதியினர், 4 பேர் மட்டுமே விளிம்பு நிலை சமூகத்தை சார்ந்தவர்கள். இது எவ்வளவு பெரிய அநீதி?. பார்ப்பனர்களின் ஆதிக்கம் இன்னும் இங்கே கொட்டமடிக்கிறது என்பதற்கு இதை விட வேறு சான்று தேவையில்லை. சாதி உணர்வை தூண்டுவது என்பது பட்டியல் மற்றும் ஒபிசி மக்கள் அணி திரண்டு விட கூடாது என்பதற்காக, மிக சாதுரியமாக சாதி பெயரால் இந்துக்களாக பிளவுப்படுத்துகிறார்கள். இந்தியர்களை மத அடிப்படையில் பிளவுபடுத்துகிறார்கள் - என்றார். (ஐ)

# தமிழ் தேசிய கூட்டமைப்பை பிரித்தவர் விக்னேஸ்வரனே!

### தமிழரசின் சரவணபவன் கூறுகிறார்



யாழ்ப்பாணம், பெப். 14

விக்னேஸ்வரனுடன் சென்றால் பெரிதாக சாதிக்கலாம் என்ற எண்ணத்துடனே தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரிந்து சென்றது. ஆனால், விக்கினேஸ்வரன் சமர்த்தியமாக பிரித்து விட்டு ஒதுங்கிக் கொண்டுள்ளார் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஈ. சரவணபவன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டத்திலேயே அவர் மேற்படி தெரிவித்தார்.

அத்துடன், விக்னேஸ்வரன் எங்கு சென்றாலும் சேர்வதும் பின்னர் பிரிப்பதுமே அவருடைய பாணி. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் புரிந்துணர்வு இல்லாமல் இருந்தது. இந்த சந்தர்ப்பத்தை பாவித்து கட்சியை விட்டு அவர்கள் வெளியேறினார்கள். இதன் உண்மை தன்மை தொடர்பில் எதுவும் கூற முடியாத நிலையே காணப்படுகிறது.

பங்காளி கட்சிகளின் தலைவர்களுடன் பாராளுமன்றத்தில் வைத்து பிரிந்து தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தெரிவிக்கப்பட்டது. அதற்கு அவர்கள் சம்மதித்திருந்தனர் என்று தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்திருந்தார். அதனை தான் நம்பினார் என்றும் சரவணபவன் கூறினார். (ஐ)

# வடக்கின் சகல செயல்பாடுகளும் 13இற்கு அமையவே நடக்கின்றன!

### மாகாண ஆளுநர் ஜீவன் சொல்கிறார்



யாழ்ப்பாணம், பெப். 13

**மறுமலர்ச்சியை நோக்கி வடக்கு மாகாணத்தில் பல செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு அவ்வித மான அனைத்து செயல்பாடுகளும் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாகவே முன்னெடுக்கப்படுவதாகவும் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண கலாசார நிலையமானது கலைகள், நம்பிக்கைகள் மற்றும் கலாசாரம் என்பவற்றை கொண்டாடும் வகையில் எமது செழிப்பான பிராந்திய வரலாற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. அது, அற்புதமான வசதிகளைக் கொண்டதாகவும் உபகண்டத்திலுள்ள கலைகளுக்கு ஒரு அடையாளச் சின்னமாகவும், உலகளாவிய பல நகரங்களில் உள்ள வசதிகளை பின்பற்றுவதாகவும் அமைந்துள்ளது.

இந்த நன்கொடையை எமக்கு வழங்கியமைக்காக இந்திய அரசுக்கும் அதன் மக்களுக்கும் நன்றி உடையவர்களாக இருக்கின்றோம்.

இக்கொடையானது கலை உலகத்துடன் எம்மை இணைப்பதுடன் அதனை சென்றடையவும் வைக்கின்றது.

தற்போது விமானங்கள் கிட்டத்தட்ட முழு எண்ணிக்கையான பயணிகளுடன் இயங்குகின்றன. பயணப் படகுகள் ஆரம்பிப்பதற்கு தயாராகவுள்ளன - என்றார். (ஐ)

# இறுதிநேரத்தில் மனம் மாறினர் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள்!

யாழ்ப்பாணம், பெப். 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அளித்த வாக்குறுதிகளை உரிய காலத்துக்குள் நிறை வேற்றாத காரணத்தால் அவர் கலந்துகொள்ளும் எந்தவொரு பொது நிகழ்வுகளிலும் பங்கேற்பதில்லை என்று தமிழ் எம். பிக்கள் தீர்மானித்திருந்தனர்.

இந்நிலையில், நேற்றுமுன் தினம் யாழ்ப்பாண கலாசார நிலையத் திறப்பு விழாவிலும் பங்கேற்பதில்லை என்ற நிலைப்பாட்டிலேயே அவர்கள் இறுதி வரையில் இருந்துள்ளனர்.

இருப்பினும், வெள்ளிக்கிழமை இரவு இந்திய மத்திய இணையமைச்சர் எல்.முருகன் மற்றும் தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை ஆகியோருடன் நடைபெற்ற விருந்துபசாரத்துடனான சந்திப்பின் பின்னர் அந்த முடிவை சில தமிழ் பாராளுமன்ற உறுப்பி னர்கள் மாற்றிக்கொண்டுள்ளனனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்பின்போது, இணை அமைச்சர் முருகன் மற்றும் அண்ணாமலை ஆகியோர் யாழ்ப்பாண கலாசார மண்டபத்தைக் கையளிக்கும் வரலாற்று நிகழ்வில் அவர்களை பங்கேற்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை சாதகமாக பரிசீலிப்பதாக அதில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே, யாழ்ப்பாண கலாசார நிலையத் திறப்பு விழா நிகழ்வில் தமிழ் எம்.பி.க்கள் பங்கேற்றிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சுமந்திரன், சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# 46 பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பெண் சந்தேகநபர் கைதானார்!

கொழும்பு, பெப். 13

சோயாமீற் விநியோகிப்பதாகக் கூறி இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் மோசடி செய்ததுடன் நீதிமன்றங்களால் 46 பிடியாணைகளும் பிறப்பிக்கப்பட்ட பெண்ணை கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று கைது செய்துள்ளனர்.

நுகேகொடை - நாவல பிரதேசத்தில் வர்த்தக நிறுவனமொன்றை நடத்தி வந்த 38 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் சோயாமீற் இறக்குமதி செய்யும் தொழிலை நடத்தியதுடன் ஒரு இலட்சம் முதல் ஐந்து இலட்சம் ரூபாய் வரை பணத்தை பெற்றுக் கொண்டு வர்த்தக நிறுவனங்களிடம் நிதி மோசடி செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோசடியில் சிக்கிய பல வர்த்தகர்கள் மிரிஹானை பொலிஸில் முறைப்பாடு செய்த நிலையில், இந்தப் பெண் மீது 46 வழக்குகளைப் பதிவு செய்து பொலிஸார் விசாரித்துவருகின்றனர். இந்த அனைத்து வழக்குகளிலும் ஒரே அமர்வுக்கு மட்டும் மன்றில் முற்பட்டமையால் இந்த சந்தேகநபர் மீது 46 பிடி விறாந்துகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான பெண் இன்று திங்கட்கிழமை கங்கொடவிலை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். (ஐ)

# ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் கைது!

கொழும்பு, பெப். 13

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவரை பொலிஸார் நேற்று முன்தினம் இரவு களுத்துறை - புலத்சிங் கள பகுதியில் கைதுசெய்துள்ளனர்.

புலத்சிங்கள பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், நேற்று முன்தினம் இரவு வீடொன்றை சுற்றிவளைத்தபோதே, அந்த வீட்டிலிருந்த குறித்த பெண்ணை 10 கிராம் ஹெரோயினுடன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஹெரோயின் போதைக்கு அடிமையானவர்கள் எனவும், அவர்கள் புலத்சிங்கள பிரதேசம் முழுவதும் ஹெரோயின் விநியோகத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரின் கணவர், தந்தை உட்பட அவரின் குடும்பத்தினர் போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அவசரமற்ற சத்திர சிகிச்சைகளை தாமதப்படுத்துமாறு அரசு உத்தரவு!

கொழும்பு, பெப். 13

நாட்டிலுள்ள அரசாங்க மருத்துவமனைகளில் அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற சத்திர சிகிச்சைகளை தற்போது மேற்கொள்வதில்லை என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மருந்துகள் மற்றும் உபகரணங்கள் தட்டுப்பாடு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அத்தியாவசிய மற்றும் அவசர சத்திரசிகிச்சைகள் வழமை போன்று மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவசர சத்திர சிகிச்சைகளுக்கு முன்னுரிமை வழங்குமாறும் மருத்துவமனைகளில் அவசரமற்ற சத்திரசிகிச்சைகளை தாமதப்படுத்துமாறும் சுகாதார அமைச்சு அறிவு த்தியுள்ளது. (ஐ)

# ஒன்றாக மது அருந்தியோர் சண்டையிட்டதில் ஒருவர் பலி!

கொழும்பு, பெப். 13

மது அருந்தியபோது ஏற்பட்ட தர்க்கம் அடிதடியில் முடிந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

இரத்தினபுரி - பெல்மதுல்ல பிரதேசத்தை சேர்ந்த 32 வயது நபரே இவ்வாறு கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக பொலிஸார் நடத்திய விசாரணையில், கொலையுண்ட நபர் கடந்த 10ஆம் திகதி இரவு தனது வீட்டில் வேறு ஒருவருடன் சேர்ந்து மது அருந்தியுள்ளார்.

இதன்போது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்தே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# புலம்பெயர் தொழிலாளர்களால் வெளிநாட்டு பணம் அதிகரிப்பு!

கொழும்பு, பெப் 13

2023 ஜனவரியில் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர் களின் வெளிநாட்டுப் பணம் கணிசமான அதிகரித்துள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

2022 ஜனவரியில் பதிவான 259.2 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 2023 ஜன வரியில் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் வெளிநாட்டுப் பணம் 437.5 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக அமைச்சர் டுவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"இது ஜனவரி 2022 இல் பதிவான வரத்துகளுடன் ஒப் பிடுகையில் 68.8 வீதம் அல்லது 178.3 மில்லியன் அமெரிக்க டொலர் அதிகரிப்பாகும்" என்றும் அமைச்சர் நாணயக்கார மேலும் கூறினார். (ஐ)

# அத்தியாவசிய தேவைக்கு மட்டுமே வாகனங்களைப் பயன்படுத்தலாம்!

### அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, பெப். 13

அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே வாகனங்களை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திறைசேரி செயலாளர் சிறீவர்த்தன இது தொடர்பில் அனைத்து அரசாங்க நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் அறிவித்துள்ளார்.

கூடுமானவரை மெய்நிகர் வழிமுறைகளை பயன்படுத்தி கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலம் போக்குவரத்து தேவைகள் ஏற்படுவதை மட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இது தொடர்பான அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு



# அரசாங்கத்தின் அடக்குமுறைகளால் நெருக்கடிகள் மேலும் தீவிரமாகும்!

## 40 மனித உரிமைகள் அமைப்புகள் எச்சரிக்கை

கொழும்பு, பெப் 13

**அரசாங்கத்தின் தற்போதைய அடக்குமுறைகள், நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிகளை தீர்ப்பதற்கு பதிலாக அவற்றை மேலும் தீவிரமாக்கும் என்று 40 மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களும் 89 மனித உரிமைவாதிகளும் கூட்டாக சுட்டிக்காட்டியுள்ளனர்.**

அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு மத்தியில் நாட்டு மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்தி சமூகம் மற்றும் சமயத்துக்கான நிலையம், இலங்கை ஆசிரியர் சங்கம், காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்ப ஒன்றியம், மனித உரிமைகள் அலுவலகம், சட்டம் மற்றும் சமூக நிதியம், மக்களுக்கான சட்டத்தரணிகள் பேரவை உள்ளிட்ட 40 மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களும் 89 மனித உரிமைவாதிகளும் இணைந்து கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அதில், தற்போது நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருப்பதுடன் நாட்டு மக்களின் வாழ்வதற்கான உரிமையும் மீறப்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரசாங்கம் பெருந்தொகை நிதியை செலவிட்டு 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி சமூக செயல்பாட்டாளர்கள், தொழில் சங்கங்கள், தொழில் வல்லுநர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களால் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகத்தின் மீது வன்முறைக் குழுக்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான தாக்குதலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

குறிப்பாக, அரசாங்கத்தின் "சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்வுகள்" இடம்பெறும் நாளில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளை நடாத்துவது குறித்து நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட உத்தரவுக்கமைய, எவ்வித குழப்பங்களோ அல்லது பொது மக்களுக்கான இடையூறுகளோ இன்றி முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் ஊடாக அமைதியாக ஒன்றுகூடுவதற்கும், எதிர்ப்பு தெரிவிப்பதற்கும் நாட்டு மக்கள் கொண்டிருக்கும் உரிமை எந்தளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

அதுமாத்திரமன்றி, இத்தாக்குதல்களின்போது கைதுசெய்யப்பட்ட சமூக செயல்பாட்டாளர்களின் மருத்துவ மற்றும் சட்ட உதவியை பெறுவதற்கான உரிமை மறுக்கப்பட்டதன் ஊடாக அவர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது. நாடொன்றின் சுதந்திரம் என்பது அந்நாட்டு மக்கள் தமது அடிப்படை உரிமைகளை அனுபவித்து, கௌரவமான பிரஜைகளாக வாழ்வதற்கு கொண்டிருக்கும் உரிமையிலேயே தங்கியிருக்கிறது. ஆனால், தற்போதைய அரசாங்கம் சுதந்திர தினத்தை கொண்டாடுவதாக கூறிக் கொண்டு நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கிறது.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக தற்போது நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

பொருட்களின் விலையேற்றம் மற்றும் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான பற்றாக்குறை, வேலையிழப்பு, வரிச்சுமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் நாட்டின் பெரும்பான்மை மக்கள் தமது அடிப்படை தேவைகளை கூட பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

நீண்ட கால யுத்தம் மற்றும் இனவாத அரசியலால் ஒடுக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் சமூகங்களும், பெருந்தோட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட மலையக மக்களும், மேலும் பலருக்கு கிடைத்ததாக கூறப்படும் "சுதந்திரத்தின்" பின்னரும் தமக்குரிய அடிப்படை உரிமைகள் கூட பூர்த்தி செய்யப்படாமல் துன்பப்பட்டு வருகின்றனர்.

நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்று, 75 ஆண்டுகள் நிறைவடையும் இத்தருணத்தில் நாட்டு மக்கள் முகங்கொடுத்துவரும் இப்பிரச்சினைகளை தீர்ப்பது குறித்து கவனம் செலுத்தாமல், அவை தொடர்பில் குரல் கொடுக்கும் மக்களை தொடர்ச்சியாக ஒடுக்க முயல்வது கவலைக்குரிய விடயமாகும்.

முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்த தன்னிச்சையான, தான்தோன்றித்தனமான கொள்கைகளும் அடக்குமுறை நடவடிக்கைகளுமே நாடு தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு பிரதான காரணம் என்பதை நாம் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

எனவே, அரசாங்கத்தின் தற்போதைய அடக்குமுறைகள் இந்த நெருக்கடிகளை தீர்ப்பதற்கு பதிலாக மேலும் தீவிரமாக்கும் என்பதை சுட்டிக்காட்டுகின்றோம்.

அமைதியான முறையில் ஒன்றுகூடுதல், அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்தல் என்பன இலங்கையின் அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளாகும். ஆனால், இந்த அரசாங்கம் தான்தோன்றித்தனமான முறையில் அந்த உரிமையை மீறுகின்றது. ஆகவே, நாட்டு மக்களின் வாழ்வதற்கான உரிமை உள்ளடங்கலாக அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காக தீர்க்கமாக தலையிடுமாறு சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் நாட்டு மக்கள் அனைவரிடமும் வலியுறுத்தி கேட்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# ஒருபுறம் சுதந்திர நாள் கொண்டாட்டம் மறுபுறம் யாசகம் கேட்டுத் திரிகிறோம்!

## கர்தினால் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, பெப். 13

சுதந்திர தினத்தை பிரமாண்டமாக கொண்டாடி எமது நாடு சிறப்பாகவுள்ளதாக வெளிநாட்டு தூதுவர்களிடமும், இராஜதந்திரிகளிடமும் காண்பித்துக்கொண்டிருக்கும் அதேவேளை, மறுபுறம் சர்வதேசத்திடம் யாசகம் கேட்டு சென்று கொண்டிருக்கின்றோம். கடந்த 75 ஆண்டுகளாக இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகளே இதற்கு காரணமாகும் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை தற்போது மிகவும் நெருக்கடிகள் மிக்க நாடாகக் காணப்படுகிறது. கடந்த 75 ஆண்டுகளாக இடம்பெற்ற ஊழல் மோசடிகளால் இந்த நிலைமை ஏற்பட்டது. இலங்கை இன்று பொருளாதார ரீதியில் மாத்திரமின்றி, சகல துறைகளிலும் வீழ்ச்சியடைந்த நாடாக காணப்படுகிறது.

பொருளாதார சீர்குலைவால் மாத்திரமின்றி அனைத்து துறைகளினதும் சீர்குலைவின் காரணமாகவே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது மக்கள் சரியான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தயாராக இல்லை. நீதியை போன்றே சரியானவற்றை நடைமுறைப்படுத்துவதை இன்று மக்கள் மறந்துள்ளனர்.

தமக்கு ஏதேனுமொன்று கிடைக்கப் பெறும் என்ற எதிர்பார்ப்பிலேயே அனைத்தையும் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். உயர் மட்டத்திலிருந்து அடி மட்டம் வரை எவரேனும் ஒருவரிடம் ஏதாவதொன்றை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

பெப்ரவரி 4ஆம் திகதி என்ன சுதந்திர தினத்தை கொண்டாடினோம்?

21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு, தேசிய கொடியேற்றப்பட்டு, வீதிகளில் மரியாதை அணிவகுப்புக்களை ஏற்பாடு செய்து, இது சிறந்த நாடு என்பதை தூதுவர்களுக்கும், வெளிநாட்டு இராஜ தந்திரிகளுக்கும் காண்பித்தோம். ஆனால், மறுபுறம் சர்வதேசத்திடம் யாசகம் கேட்டு சென்று கொண்டிருக்கின்றோம்.

இதுவா சுதந்திரம்? புரட்சியுடன் சுதந்திர தினத்தை கொண்டாடுவோம் என்று ஜனாதிபதி கூறுகின்றார். அது எமது சுதந்திரமா அல்லது ஜனாதிபதியின் சுதந்திரமா?

இலங்கை இதற்கு முன்னர் இழைத்துள்ள பல தவறுகளின் காரணமாகவே இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதில் பிரதானமானது திறந்த பொருளாதார கொள்கையை நடைமுறைப்படுத்தியமையாகும். எமது நாட்டில் காணப்படும் பொருட்களுக்கான தட்டுப்பாடு இந்தியாவுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. சீனாவுடனும் இவ்வாறான உறவே காணப்படுகிறது - என்றார். (ஐ)

# கஜேந்திரன் எம். பி. உட்பட கைதான 18 பேருக்கும் பிணை!



யாழ்ப்பாணம், பெப். 13

சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு எதிராக யாழ். நகரில் போராட்டம் நடத்திய பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உள்ளிட்ட 18 பேரையும் தலா மூன்று இலட்சம் பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் செல்ல யாழ்ப்பாண பதில் நீதிவான் அனுமதித்தர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 11மணியளவில் நீதிவானின் வாசஸ்தலத்தில் 18 பேரையும் பொலிஸார் முற்படுத்தியபோதே பதில் நீதிவான் இந்த உத்தரவையிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு எதிராக யாழ். நகரில் போராட்டம் நடத்தியவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

இலங்கையின் சுதந்திர தினம் தமிழர்களின் கரிநாள் என பிரகடனப்படுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்ப்புப் போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில் போராட்டங்கள், பேரணிகள் நடத்துவதை தடுப்பதற்கு நீதிமன்றம் ஊடாக பொலிஸார் தடை உத்தரவு பெற்றிருந்தனர்.

எனினும், தடை உத்தரவை மீறி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் எதிர்ப்பு போராட்டம் திட்டமிட்டபடி நடத்தப்பட்டிருந்தது. இதனையடுத்து சம்பவ இடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு போராட்டத்தை தடுக்க முயற்சிக்கப்பட்டதுடன் 18 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முகநூலில் ஜனாதிபதி அநுர குமாரவேதான்!

## அமைச்சர் பிரசன்ன நையாண்டி



கொழும்பு, பெப். 13

“அநுர குமார திஸநாயக்க ஏற்கனவே ஜனாதிபதிக்கான ஆடையை அணிந்துள்ளார். முகநூலின் தலைவராகவும் உள்ளார்.” என்று குறித்து அமைச்சர் பிரசன்ன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“அநுர ஏற்கனவே ஜனாதிபதிக்கான ஆடையை அணிந்துள்ளார். முகநூலின் தலைவராகவும் உள்ளார். ஜனாதிபதியைப் போன்று அவர் நடக்கின்றார் - உரையாற்றுகின்றார். எந்த கனவை அவர் கண்டாலும் மக்களின் மனங்களில் ஜனாதிபதியாக முடியாது.

கடந்த ஜனாதிபதியாகத் தேர்தலில் சஜித் பிரேமதாஸ இவ்வாறுதான் நடந்து கொண்டார்.

அநுரவையும் சஜித்தையும் இதே போன்று கனவை தொடருமாறு கேட்டுக் கொள்கின்றோம். நிலத்தில் வேலை செய்து நாட்டைக் கட்டியெழுப்புவோம்” என்று பிரசன்ன மேலும் தெரிவித்தார். (ஐ-சி)

# சிறீலங்கன் விமான சேவை செயலிழக்கும் அபாய நிலை!

கொழும்பு, பெப். 13

**விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் விமானிகளுக்கு சர்வதேச சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்படாவிட்டால் இந்த சேவைகள் செயலிழக்கும் அபாயம் உள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.**

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பணிபுரியும் விமான போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் சிறீ லங்கன் எயார் லைன்ஸ் விமானிகள் பணியிலிருந்து விலகுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி தற்போது நாட்டில் உள்ள விமான நிலையங்களில் பணியாற்ற வேண்டிய 56 விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் பதவிக்கு பற்றாக்குறை நிலவுகின்றது என்று விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் திசர அமரானந்தா தெரிவித்தார்.

இலங்கையில் விமான சேவைக்கு குறைந்தது 138 விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், தற்போது 82 விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களே சேவையில் இருக்கின்றனர்.

எதிர்காலத்தில் வெற்றிடங்களுக்கு 25 புதிய விஞ்ஞான பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். அவர்கள் தொழில் நிபுணத்துவம் பெறுவதற்கு சுமார் 10 வருடங்கள் ஆகும் எனவும் தலைவர் தெரிவித்தார்.

விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களுக்கு மேலதிகமாக, இலங்கை விமானிகளும் அதிக எண்ணிக்கையில் சேவையை விட்டு வெளியேறுகின்றனர். தற்போது இலங்கை சேவையில் இருக்க வேண்டிய 250 விமானிகளில் 44 பேர் பணியை விட்டு விட்டு வெளிநாட்டு விமான நிறுவனங்களுக்கு வேலைக்குச் சென்றுள்ளனர்.

இதன் காரணமாக விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் விமானிகளுக்கு சர்வதேச சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்படாவிட்டால் இந்த சேவைகள் செயலிழக்கும் அபாயம் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-சி)

# உள்ளூராட்சி தேர்தல் முடிவடைந்ததும் பிரதான கட்சியின் செயலாளர் நீக்கம்?

கொழும்பு, பெப். 13

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடைந்தவுடன் பிரதான அரசியல் கட்சியொன்றின் செயலாளர் நீக்கப்படவுள்ளார் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

செயலாளரின் நடவடிக்கையால் கட்சியின் ஒற்றுமை காணாமல் போய் விட்டதாகவும், கட்சி நோக்கத்துக்காக இல்லாமல் தனது சொந்த நோக்கத்திற்காக கட்சியை நடத்துகிறார் என்றும் அவர் மீது கட்சியினர் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர்.

அத்துடன், கட்சியில் புதிய குழு மோதலை அவர் உருவாக்கி வருகிறார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கட்சித் தலைவர் தலைமையிலான மூத்த தலைவர்களின் முடிவின்படி உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவடைந்தவுடன் அவர் பதவியில் இருந்து நீக்கப்படுவார் என தெரிய வருகின்றது.

அவரை நீக்கிய பின்னர் நேரடியாக அரசியலில் தொடர்பில்லாத தொழில் வல்லுநர் ஒருவர் அக்கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-சி)

# பணிக்கு விடுப்பு கொடுக்காமல் வேட்பாளரானவர் இடைநீக்கம்!

கொழும்பு, பெப். 13

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி அநுராதபுரம் மாநகர சபைக்கு போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ள அநுராதபுரம் நகரிலுள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவருக்கு பணிபுரிய வடமத்திய மாகாண கல்வி திணைக்களம் தடை விதித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை சமர்ப்பித்தமைக்காக குறித்த அதிபர் தனது பதவியில் விடுப்பு எடுக்கவில்லை. இதன் காரணமாகவே அவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பான முறைப்பாட்டை ஆராய்ந்த வடமத்திய மாகாண கல்வி திணைக்களம், குறித்த அதிபரின் சேவையை உடனடியாக அமுலுக்குவரும் வகையில் இடைநிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

தேர்தல் சட்டத்தின்படி, அரச துறையில் பணியாளர் தரநிலையில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டால், அவர் வேட்புமனுவைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தனது பதவியிலிருந்து விடுப்பு எடுக்க வேண்டும் என்பது கட்டாயமானது. (ஐ-சி)

# துருக்கி நிலநடுக்கம்; இலங்கை பெண் பலி!

கொழும்பு, பெப். 13

துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 69 வயதுடைய இலங்கைப் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது.

குறித்த பெண் சுமார் 20 வருடங்களாக துருக்கியில் வசித்து வந்தார். இவர் கண்டியின் கலகெதரவை சேர்ந்தவராவார். இவரின் மரணத்தை துருக்கிக்கான இலங்கை தூதுவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

உயிரிழந்த பெண் துருக்கியர் ஒருவரை திருமணம் செய்து, அந்த நாட்டில் வசித்து வந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் அவரின் மகளால் அடையாளம் காட்டப்பட்டுள்ளதாக



இலங்கை தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த வார தொடக்கத்தில் துருக்கி - சிரியா நாடுகளை உலுக்கிய பேரழிவு நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பலியானவர்களின் தொகை 28,000 க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டொலர் நெருக்கடி காரணமாக குதிரை உணவுக்கும் பஞ்சம்!

கொழும்பு, பெப். 13

டொலர் நெருக்கடியின் விளைவாக இலங்கை பொலிஸ் துறை குதிரைப் படைப் பிரிவின் குதிரைகளுக்கு உள்ளூர் தானியங்களை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இதுவரை வெற்றியளித்துள்ளதாக அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் டொலர் நெருக்கடியின் காரணமாக குதிரைகளுக்கு தேவையான உணவை இறக்குமதி செய்ய முடியாத நிலையில், பச்சைப் பயறு, கொண்டைக்கடலை மற்றும் சோளம் போன்ற உள்ளூர் தானியங்களை படைப் பிரிவின் குதிரைகளுக்கு அளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

குதிரைகளுக்குத் தேவையான உணவை இறக்குமதி செய்ய இயலாமை, இறுதியில் அவற்றின் எடை குறைந்து மெலிந்து போவதற்கு காரணமானது. எவ்வாறாயினும், புதிய வேலைத்திட்டத்தின் மூலம், குதிரைகளின் எடையில் ஒரு தெளிவான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக குதிரைப் படைப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# இறக்குவதற்கு பணம் இல்லை நிலக்கரி கப்பல்கள் காத்திருப்பு

கொழும்பு, பெப். 13

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி அனல் மின் நிலையத்துக்காக வரவழைக்கப்பட்டுள்ள இரண்டு நிலக்கரி கப்பல்களுக்கும் பணம் செலுத்த முடியாமல், பல நாட்களாக புத்தளம் கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இரண்டு கப்பல்களிலும் உள்ள நிலக்கரியை இறக்குவதற்கு முன்னர் மீதமுள்ள 70 சதவீத தொகையை செலுத்த வேண்டும். இதற்கு 2,000 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# வாகன விபத்தில் தந்தை, மகள் பலி!

கண்டி, பெப். 13

வாகனம் கோளாறானதில் ஏற்பட்ட விபத்தில் தந்தையும் மகளும் பலியாகினர்.

கண்டி - கட்டுகஸ்தோட்டை - நவயாலதென்யில் இடம்பெற்ற இந்த விபத்தில் ரோகண ஜயந்த (வயது 47), மதூசி மேகலா தனஞ்சனா (வயது 14) ஆகியோரே உயிரிழந்தனர்.


இருவரும மரணச் சடங்கு ஒன்றில் பங்கேற்றுவிட்டு வாகனத்தில் திரும்பிக் கொண்டிருந்தபோது அது கோளாறானதில் விபத்து ஏற்பட்டது.

விபத்தில் காயமடைந்த இருவரும் கட்டுகஸ்தோட்டை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது இருவரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நேரு குடும்பத்தினர் 'காந்தி' பெயரைப் பயன்படுத்துவது ஏன்?

## நரேந்திர மோடி விமர்சனத்தின் பின்னணி என்ன?

- முரளிதரன் காசிவிஸ்வநாதன்



நேரு குடும்பத்தினர் தங்களது பெயர்களுக்குப் பின்னால் 'நேரு" என போட்டுக்கொள்ள வெட்கப்படுகிறார்களா என பிரதமர் நரேந்திரமோடி இந்திய நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்கிறார். நேரு குடும்பத்தினர் தங்கள் பெயருக்குப் பின்னால் நேரு என்ற பெயரைப் பயன்படுத்தாமல் காந்தி என்ற பெயரை பயன்படுத்துவது ஏன்?

கடந்த வாரம் வியாழக்கிழமையன்று இந்திய நாடாளு மன்றத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் மீது கடுமையான தாக்குதல் தொடுத்தார். மாநிலங்கள வையில் பேசிய பிரதமர், 'ஏதாவது ஒரு திட்டத்திற்கு நேரு வின் பெயரைக் குறிப்பிட மறந்தால் அவர்கள் (காங்கிரஸ்) ஆத்திரமடைகிறார்கள். அவர் அவ்வளவு பெரிய மனித ராக இருந்தால் அவர்கள் குடும்பத்தில் யாரும் தங்கள் பெயருக்குப் பின்னால் ஏன் நேருவின் பெயரை பயன்ப டுத்துவதில்லை? நேருவின் பெயரைப் பயன்படுத்துவ தில் என்ன வெட்கம்?" என்று கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலடி கொடுத்த காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ரன்தீப் சுர்ஜேவாலா, 'கடவுள்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும். மிகப் பொறுப்பு மிக்க பதவியில் அமர்ந்திருக்கும் ஒருவருக்கு இந்தியாவின் பண்பாட்டைப் பற்றித் தெரியவில்லை. அல்லது புரிய வில்லை. அவர்கள்தான் இப்படிப் பேசுவார்கள். தாய் வழித் தாத்தாவின் பெயரை யார் பயன்படுத்துகிறார்கள் என இந்த நாட்டில் யாரை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள்" என்றார்.

பிரதமர் மோடியின் இந்தப் பேச்சு குறித்து சமூக வலை தளங்களிலும் விவாதங்கள் தொடர்ந்து நடந்து வருகின் றன.

உண்மையில், நேரு குடும்பத்தினர் ஏன் 'நேரு' என்ற பின்னொட்டை தங்கள் பெயருக்குப் பின்னால் பயன் படுத்துவதில்லையா? இல்லை, இந்தக் கூற்றுத் தவறானது. நேரு குடும்பத்தைச் சேர்ந்த ஆண் வாரிசுகள் தொடர்ந்து 'நேரு" என்ற பின்னொட்டையே தங்கள் பெயருக்குப் பின்னால் பயன்படுத்துகிறார் கள். நேரு குடும்பத்தைச் சேர்ந்த பெண் வாரிசுகள் தங்கள் கணவரது பெயரை தங்கள் பெயருக்குப் பின்னால் பயன்படுத்துகி றார்கள். இந்திரா காந்தியின் விஷயத்தில் நடந்தது அதுதான்.

நேரு குடும்பத்தின் சமீப கால வரலாறு, ஜவஹர்லால் நேருவின் தாத்தாவான கங்காதர் நேருவிலிருந்து (1827-1861) தொடங்குகிறது. இவருக்கு பன்சி தர் நேரு, நந்தலால் நேரு, மோதிலால் நேரு என மூன்று மகன்கள். இவர்கள் மூவருமே தங்கள் தந்தையின் குடும்பப் பெயரான நேரு என்ப தையே பயன்படுத்தினர்.

இதில் மோதிலால் நேருவுக்கு மூன்று குழந்தைகள்: ஜவஹர்லால் நேரு, விஜய லட்சுமி, கிருஷ்ணா. இவர்களில் ஜவ ஹர் லால் ஆண் வாரிசாக, 'நேரு" என்ற குடும் பப் பெயரைப் பயன்படுத்தினார். விஜய லட்சுமி, குஜராத்தைச் சேர்ந்த வழக்கறிஞ ரான ரஞ்சித் சீதாராம் பண்டிட்டை திரும ணம் செய்துகொண்டு, விஜயலட்சுமி பண் டிட் ஆனார். கிருஷ்ணா திருமணம் வரை நேரு என்ற பின்னொட்டைப் பயன்படுத்திவந்தார். அவர் குணோத்தம் ராஜா ஹடீசிங் என்பவரைத் திருமணம் செய்து கொண்ட பிறகு 'கிருஷ்ணா ஹடீ சிங்' ஆக மாறினார். விஜயலட் சுமி பண்டிட்டின் குழந்தைகளும் பெண்களாக இருந்ததால் அவர் கள் தங்கள் கணவர்களின் குடும் பப் பெயரையே பின்னொட்டா கப் பயன்படுத்துகின்றனர்.

ஜவஹர்லால் நேருவைப் பொறுத்தவரை, அவரது ஒரே மகளா இந்திரா, 1917 நவம்பரில் பிறந்தார். அந்தக் குழந்தைக்கு தனது தாயின் பெயரான இந்தி ராணி என்பதை சற்று சுருக்கி, 'இந்திரா' என சூட்டினார் மோதிலால் நேரு. அந்தப் பெய ருடன் 'பார்வைக்கு இனியவள்' என்ற பொருள்படும் பௌத்தப் பெயரான 'ப்ரிய தர்ஷினி' என்ற பெயரையும் சேர்த்தார் ஜவ ஹர்லால்.

இந்திரா ப்ரியதர்ஷினி தனது திருமணம் வரை 'நேரு' என்ற குடும் பப் பெயரையே பயன் படுத்தி வந்தார். ஜெஹாங்கீர் பரேதூ ன் காந்திக் கும் அவருடைய மனைவி ரட்டிமா யிக்கும் கடைசிக் குழந்தை யாகப் பிறந்தவர்தான் பெரோஸ் காந்தி. இவர் பார்சி மதத்தைச் சேர்ந் தவர். இந்திராவும் பெரோஸ் காந்தி யும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டனர்.


இந்திராவைக் காதலிப்பதை பெரோஸ் பலமுறை வெளிப்படுத்தி வந்தாலும், நீண்ட நாட்களுக்குப் பிறகே அந்தக் காதலை இந்திரா ஏற் றுக்கொண்டார். அது பெரோசுக்கு மகிழ்ச்சியளித்தாலும், வேறு சில கவலைகளையும் தந்தது. குறிப்பாக, குடும்பப் பெயர் குறித்த அச்சம் இருந்தது.

இந்திராவின் தோழியான ஷாந்தா காந்தியிடம் இதைப் பற்றிப் பேசும் போது, 'தான் இந்தி ராவை மணப்பதில் உறுதியாக இருந்தாலும், இந்திரா-இந்திரா காந்தியாவதற்குப் பதிலாக நேருவின் குடும்பம் பெரோஸின் ஆளுமையைக் குறைத்து, அவரையும் நேரு குடும்பத்தைச் சேர்ந்தவராக்கிவிடும்" என்று கவலையுடன் கூறியதாக இந்திரா காந்தியின் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதிய கேதரீன் ப்ராங்க் குறிப்பிடுகிறார்.

ஆனால், அப்படி நடக்கவில்லை. 1942ல் இந்திராவுக் கும் பெரோஸ் காந்திக்கும் திருமணமானது. திருமண மான சில நாட்களுக்குப் பிறகு 'காந்தி" என்ற பின்னொட் டையே இந்திரா எடுத்துக்கொண்டார். 1944 ஆகஸ்ட் மாதம் 20ஆம் தேதி அவர்களுடைய முதல் குழந்தை பிறந்தது. இந்த சமயத்தில் ஜவஹர்லால் நேரு சிறையில் இருந்தார்.

சிறையில் இருந்தபடி தன்னுடைய பேரனுக்கு பல பெயர்களை பரிந்துரைத்தார் ஜவஹர்லால் நேரு. ஆனால், எந்தப் பெயரும் சூட்டப்படாமலேயே நாட்கள் கழிந்தன. முடிவில், "ராஜீவ் ரத்னா (இந்திரா விரும்பியபடி) என்ற பெயரையே வைத்துக்கொள்ளலாம். விரும்பினால், பிர ஜீஸ் என்ற பெயரையும் சேர்த்துக்கொள்ளளாம். அதோடு நேரு என்பதையும் கூடுதலாகச் சேர்த்தால் எப்படியிருக் கும்? நேரு - காந்தி என இரட்டை பின்னொட்டு இருக்க வேண்டுமென நான் நினைக்கவில்லை. அது நன்றாக இருக்காது. வெறும் 'நேரு" என்று மட்டும் இருக்கலாம்" என்று தனது கடிதம் ஒன்றில் கூறினார் ஜவஹர்லால் நேரு.

தனக்கு மகன் யாரும் இல்லாததால், தனது பெயரை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல, பேரனின் பெயரைப் பயன்படுத்த நேரு விரும்பியிருக்கலாம் என்கி றார் கேத்தரீன் ப்ராங்க். ஆனால், குழந்தையின் பெயரை முதன் முதலில் எழுதும்போது **Rajiva Ratna Birjees Nehru Gandhi** என்று எழுதினார் இந்திரா காந்தி. இதில் 'ராஜீவ' என்பது தாமரையைக் குறிக்கும். 'கமலா' என்ற தனது தாயின் பெயரது பொருள் இருக்கும் வகையில் அந்த பெயர் சூட்டப்பட்டது. 'ஜவஹர்" என்பதற்கு ஆபர ணம் என்பது பொருள். அதைக் குறிக்கும் வகையில் 'ரத்ன" என்ற சொல் சேர்க்கப்பட்டது. பிர்ஜீஸ், காந்தி ஆகியவை பெரோஸ் காந்தி குடும்பத்தைச் சேர்ந்த பெயர்கள். ஆனால், நாட்கள் செல்லச் செல்ல ராஜீவ் காந்தி என்ற பெயரே நிலைத்துவிட்டது. இரண்டாவது மகனுக்கு சஞ்சய் என்ற பெயர் சூட்டப்பட்டது. அவரும் 'காந்தி' என்ற பின்னொட்டையே எடுத்துக் கொண்டார்.



பிறகு, ராஜீவின் குழந்தைகளான ராகுலும் பிரியங் காவும் 'காந்தி' என்ற பின்னொட்டைப் பயன்படுத்தினர். அவரது மனைவி சோனியாவும் அதே பின்னொட்டைப் பயன்படுத்தினார். சஞ்சயின் மனைவி மேனகா, அவர்க ளது குழந்தை வருண் ஆகியோரும் தந்தை வழியில் 'காந்தி' என்ற குடும்பப் பெயரையே பயன்படுத்தினர். இப்போது ப்ரியங்கா காந்தி தனது கணவரின் குடும்பப் பெயரான 'வத்ரா' என்பதையும் பயன்படுத்துகிறார். அவரது குழந் தைகள் 'வத்ரா' என்ற குடும்பப் பெய ரையே பயன்படுத் துகின்றனர். வருண் காந்தியின் மகள் 'காந்தி' என்ற குடும் பப் பெயரையேபயன்படுத்துகிறார்.

அப்படியானால், 'நேரு" என்ற குடும்பப் பெயரை யாரும் பயன்படுத்துவதில்லையா? நேரு குடும்பத்தைச் சேர்ந்த சில ஆண் வாரிசுகள் 'நேரு" என்ற பெயரை தொடர்ந்து பயன்படுத்துகிறார்கள். மோதிலால் நேரு வின் சகோதரரான நந்தலால் நேருவின் ஆண் வாரிசுகள் 'நேரு' என்ற குடும்பப் பெயரை இன்னும் பயன்படுத்து கிறார்கள். நந்தலால் நேருவின் கொள்ளுப்பேரனும் முன் னாள் மத்திய அமைச்சருமான அருண், அருண் நேரு என்றே அழைக்கப்பட்டார். நந்தலால் நேருவின் மகன் ப்ரிஜ்லால் நேரு என்றும் அவரது மகன்கள் சுனில் நேரு, நிகில் நேரு, பிரஜ் குமார் நேரு என்று அழைக்கப் பட்டனர்.







# இலங்கையை தொடர்ந்து பாகிஸ்தானில் நிலவும் பொருளாதார நெருக்கடி!

கடும் பொருளாதார நெருக்கடியில் பாகிஸ்தான் சிக்கித் தவிக்கிறது. இலங்கையைப் போன்றே, பாகிஸ்தானும் திவால் நிலையை நோக்கி சென்று கொண்டு இருப்பதாக பொருளாதார வல்லுநர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு ஜூன் முதல் அக்டோபர் வரை பெய்த அடைமழையின் காரணமாக வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டு பயிர் சாகுபடி சுமார் 80 வீதம் வரை பாதிக்கப்பட்டது. பலூசிஸ்தான் மாகாணத்தின் பல நகரங்களில் கோதுமைக்காக மக்கள் மோதிக் கொள்ளும் காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன. கோதுமை ஏற்றிவரும் லாரி என்று தெரிந்தால் அதை மக்கள் துரத்திக் கொண்டு ஓடுவது அந்த நாட்டின் பல பகுதிகளில் இயல்பாகிவிட்டது.

கோதுமை மட்டுமன்றி இதர அத்தியாவசியப் பொருள்களின் விலையும் விண்ணைத் தொட்டுள்ளது. உதாரணத்துக்கு, ஒரு கிலோ சர்க்கரை பாகிஸ்தான் ரூபாவில் 155 இற்கும், ஒரு கிலோ வெங்காயம் ரூ.280 இற்கும், ஒரு கிலோ கோழி இறைச்சி ரூ.800இற்கும் விற்கப்படுகிறது.

பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலையை கடந்த ஜனவரி 29ஆம் தேதி ஒரே நாளில் ரூ.35 உயர்த்தி நிதியமைச்சர் இஷாக் டார் அறிவித்தார். இதையடுத்து, அந்த நாட்டில் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ. 249.80 ஆகவும், டீசல் விலை ரூ.262.80 ஆகவும் உள்ளது. எரிபொருளுக்காக வாகனங்கள் பல கி.மீ. தொலைவு வரிசையில் நிற்கின்றன. பல மாகாணங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டு விட்டன. ‘இந்த விலை உயர்வு பகுதி அளவானதுதான். ரூபாய் மதிப்பு வீழ்ச்சி காரணமாக பிப்ரவரி மாத மத்தியில் பெட்ரோல், டீசல் விலை மீண்டும் உயர்த்தப்படும்” என்று நிதியமைச்சர் அறிவித்துள்ளது அந்நாட்டு மக்களை மேலும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. சமையல் எரிவாயு, உருளைகள் (சிலிண்டர்) தட்டுப்பாடும் உச்சத்தில் உள்ளது.

மின்சாரத் துறையின் கடன் ரூ.2 லட்சம் கோடியாக கிடுகிடுவென அதிகரித்துள்ளதால், பாகிஸ்தான் மக்கள் மின்சாரப் பயன்பாட்டை வெகுவாக குறைத்துக் கொள்ளுமாறு பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் வேண்டுகோள் விடுத்துள்ளார். மின்சாரப் பயன் பாட்டை குறைக்க சந்தைகளை இரவு 8.30 மணிக்குள்ளும், திருமண மண்டபங்கள், உணவகங்களை இரவு 10 மணிக்குள்ளும் மூடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது, சம்பந்தப்பட்டவர்களைக் கடும் அதிருப்திக்குள்ளாக்கி இருக்கிறது.

அந்நியச் செலாவணி கையிருப்பு குறைவு காரணமாக, அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மூலப் பொருள்கள், மருந்துகள் போன்றவற்றை வெளியே கொண்டுவர முடியாமல் துறைமுகங்களில் சரக்குப் பெட்டகங்கள் அணிவகுத்து நிற்கின்றன.

கடந்த ஜனவரி 27ஆம் திகதி நிலவரப்படி, அந்நியச் செலாவணி 3.08 பில்லியன் டாலர் மட்டுமே கையிருப்பில் உள்ளது. இதை வைத்து அடுத்த 3 வாரங்களை மட்டுமே சமாளிக்க முடியும் என வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். இறக்குமதியையே நம்பி உள்ள அந்நாட்டுக்கு இது கடும் சவாலாக உருவெடுத்துள்ளது.



2021-22 நிதியாண்டில் பாகிஸ்தானின் கடன் தொகை 222 பில்லியன் டாலர் ஆகும். இது அந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 89 வீதம் என்பதில் இருந்தே இதன் தீவிரத்தை உணர முடியும். சர்வதேச நிதியத்திடம் (ஐஎம்எஃப்) இதற்கு முன்னர் 2019-இல் 6 பில்லியன் டாலர் கடன் பெற்றுள்ள நிலையில், மீண்டும் கடன் பெறும் முயற்சியில் இறங்கியது. ஆனால், மின் கட்டண உயர்வு உள்ளிட்ட பல கடும் நிபந்தனைகளை ஐஎம்எஃப் விதிப்பதால் இழுபறி நீடிக்கிறது.

பொருளாதார மூச்சுத் திணறலில் இருந்து தப்பிக்க சீனாவிடமும், ஐக்கிய அரபு அமீரகத்திடமும் கையேந்தும் நிலை உள்ளது. ரூ.2.50 லட்சம் கோடி கடன் தருமாறு சவூதி அரேபியாவிடம் பாகிஸ்தான் தலைமைத் தளபதி ஆசிம் முனீர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தவறான ஆட்சியாளர்களின் மோசமான பொருளாதார மேலாண்மைதான் பாகிஸ்தானின் இன்றைய நிலைக்குக் காரணம். இந்திய எதிர்ப்பை வைத்தே காலத்தை ஓட்டலாம் என்று கருதும் அரசியல்வாதிகள், உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க எந்த நடவடிக்கையையும் பெரிய அளவில் மேற்கொள்ளாததன் விளைவுதான் இது. காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து 2019 இல் ரத்து செய்யப்பட்ட பின்னர், இந்தியாவில் இருந்து அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியை அந்நாடு நிறுத்தியதும் மற்றொரு காரணம். பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல், அரசியல் ரீதியாகவும் பலவீனப்பட்ட நிலையில் இருக்கிறது அந்த நாடு.

பாகிஸ்தானில் பொருளாதாரம் சீர்குலைந்துள்ள நிலையில், அங்கு போட்டி அரசு அமைக்க சில பயங்கரவாத குழுக்கள் முயன்றுவருகின்றன. போட்டி அரசு அமைப்பதாக தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் என்ற பயங்கரவாத அமைப்பு வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறது.

இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம் உள்ளிட்ட இந்தியாவின் அண்டை நாடுகள் பொருளாதார ரீதியாக வலுவிழப்பது இந்தியாவுக்கும் நல்லதல்ல. அகதிகள் ஊடுருவல், அதனால் ஏற்படும் சட்டம் - ஒழுங்கு பிரச்னைகள் போன்ற பல சவால்களை நாம் எதிர்கொள்ள நேரிடும்.

அந்நிய உதவியை அளவுக்கு அதிகமாக நம்பினால் கடனில் மூழ்குவதைத் தவிர வேறு வழியில்லை. ராணுவத்துக்கு செலவிடும் நிதியைக் குறைத்து ஆக்கபூர்வ வளர்ச்சிப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் மட்டுமே சில ஆண்டுகளுக்குப் பிறகாவது பாகிஸ்தான் மீள முடியும். ஆனால், அதற்கான முன்னெடுப்புகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதற்கான அறிகுறிகள்கூட தென்படவில்லை என்பது வருத்தத்துக்கு உரியதாகும்.



# மக்களை கஷ்டப்படுத்துவதால் பிரச்னைகளை தீர்க்கமுடியாது!

கொழும்பு, பெப். 13

நாடு எதிர்நோக்கும் பாரிய பிரச்னை யாது?, குறித்த பிரச்னைக்கு என்ன தீர்வு?, எந்த தலைவரால், எந்த தொலை நோக்கால், எந்த தரப்பால், எந்த வேலைத் திட்டத்தால் இதற்கான தீர்வை வழங்க முடியும்? என்ற மூன்று கேள்விகளை பற்றி இந்நாட்டின் மக்கள் சிந்திக்கி றார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மஹரகமவில் நடந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்திலேயே சஜித் பிரேமதாஸ மேற்படி கூறினார்.

மேலும், நாட்டின் மிகப் பெரிய பிரச்னை, நாட்டில் பணமில்லை என்ப தாகும். இதனால் நாடு வங்குரோத்து நிலையை அடைகிறது. அதில் இருந்து தான் ஒவ்வொரு பிரச்னையும் எழுகிறது.

வங்குரோத்தாகிக் கிடக்கும் நாட்டை மீட்பதற்கான பணத்தை பெறக்கூடிய அரசாட்சி ஒன்றுதான் இதற்கான தீர்வு. அவ்வாறான ஆட்சியின் ஊடாகவே பணப் பிரச்னைக்கு தீர்வு காணப்படும்.

பொருளாதாரத்தை சுருங்கச் செய் வதே இந்த பிரச்சினைக்குத் தீர்வு என்று தற்போதைய அரசாங்கம் நினைக்கிறது. இதற்காக வட்டி வீதங்கள் 30-35 சதவீதமாக அதிகரிக்கப்பட் டுள்ளன. இது தேவையை குறைத்து, உற்பத்தியை குறைத்து, வருமானத்தை குறைத்து, வேலையின்மையை அதிகரிக்கும்.



சிறு பொருளாதாரத்தை சுருக்கி, நிகர பொருளாதாரமும் சுருங்கும் செயற் பாடே இதில் இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் மக்களின் இயல்பு வாழ்க்கை தகர்ந்துபோகக்கூடும். ஆகவே, இந்நிலை மாற வேண்டும்.

மக்களை கஷ்டப்படுத்துவதன் மூலம் பொருளாதார பிரச்னைகளை தீர்க்க முடியாது. மக்கள் கஷ்டப்படும்போது யானை,-மொட்டு,-காக்கை, ராஜபக்ஷ குடும்பம் சுகபோகங்களை அனுபவித்து வருகின்றன.

எனவே, மக்களின் சொத்துக்கள் மற் றும் பணத்தை கொள்ளையடித்த அனை வரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, பணம் பறிமுதல் செய்யப்படும் - என் றார். (ஐ)

# வசந்த முதலிகே விடுதலை சீராய்வு மனு தாக்கல்!

கொழும்பு, பெப். 13

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே விடுதலை செய்யப்பட்ட மையை மறு ஆய்வுக்கு உட்படுத்துமாறு கோரி சீராய்வு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைத்து பல்க லைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே அண்மையில் கொழும்பு நீதிவான் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த நிலையிலேயே, சட்டமா அதி பர் கொழும்பு மேல் நீதிமன்றில் இந்த சீராய்வு மனுவை தாக்கல் செய்துள்ளது.

# மூதூரில் ஒருவர் அடித்துக் கொலை!

திருகோணமலை, பெப். 13

மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியடிச்சோலை எனும் கிராமத்தில் ஒரு வர் அடித்துக் கொலை செய்யப்பட் டார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. இதில், அதே கிராமத்தைச் சேர்ந்த முத்துசாமி கோகிலராசா (வயது 48) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இருவரிடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியதில் கோகிலராசா என்பவர் படுகாயமடைந் தார். இவர் கிளிவெட்டி மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட நிலையில் உயி ரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மூதூர் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# ஹஜ் பயணத்துக்கு முகவர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை!

## இஸ்லாமிய சமய திணைக்களம்

கொழும்பு, பெப். 13

2023ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயணத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்வதற்காக இதுவரை முகவர்கள் நியமிக்கப்படவில்லை. எனவே, முகவர்களிடம் கடவுச் சீட்டையோ, முற்பணத்தையோ வழங்கவேண்டாம் என இஸ்லாமிய சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், திணைக்களத்தின் அறிவிப்பின்றி மேற்கொள்ளும் கொடுக்கல் - வாங்கல்களை திணைக்களம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது என்றும் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான ஹஜ் கடமை தொடர்பில் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட். ஏ. எம். பைஸல் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதுவரை எந்தவொரு ஹஜ் முகவர்களையும் 2023ஆம் ஆண்டுக்கான ஹஜ் யாத்திரைக்கான முகவர்களாக உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யவில்லை என்பதை அறியத்தருகிறேன்.

எனவே, 2023ஆம் ஆண்டு ஹஜ் கடமைகளை நிறைவேற்ற விரும்புபவர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும் வரை எந்தவொரு முகவர்களிடமும் கடவுச் சீட்டையோ, முற்பணத்தையோ வழங்குவதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

மேலும், திணைக்களத்தின் மேற்படி அறிவிப்பின்றி மேற்கொள்ளும் எந்தவித கொடுக்கல் - வாங்கல்களுக்கும் திணைக்களம் பொறுப்பேற்காது என்பதை அறியத் தருகின்றேன் என்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் பைஸல் மேலும் தெரிவித்துள்ளார்.

## கல்வி tv CHANNEL-1

**13.02.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**13.02.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## நெல் விளைச்சல் குறைவு விவசாயிகள் கவலை!

திருகோணமலை, பெப். 13

கிண்ணியாவில் நெல் அறுவடை குறைவாக உள்ள அதே சமயம், உத்தரவாத விலையும் இல்லாததால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலகப் பகுதிகளில் பெரும்போக நெல் அறுவடை இடம்பெறுகின்றது.

இந்நிலையில், நெல்லுக்கு உத்தரவாத விலை இல்லாததுடன், நெல் அறுவடைக்கான கூலி உயர்வு, டீசல் தட்டுப்பாடு உள்ளிட்ட பல இன்னல்களை தாம் எதிர்நோக்குகின்றனர் என்றும் அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும், கிண்ணியா சூரங்கல், கற்குழி பகுதியில் தற்போது இயந்திரம் மூலமான அறுவடை இடம்பெறுகிறது. இச்சந்தர்ப்பத்தில் போதுமான உர மானியம் கிடைக்காமை முதலிய பல குறைபாடுகள் காணப்படுவதால் இம்முறை மஞ்சள் நோய்த்தாக்கம் ஏற்பட்டு விளைச்சலின்மை பெரும் நஷ்டத்தை உண்டாக்கியிருப்பதாகவும் விவசாயிகள் கூறினர்.

அரசாங்கம் விவசாயிகளின் விடயத்தில் கரிசனை காட்டி தங்களுக்கு உதவுமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# அம்பாறையில் தீவிர கடலரிப்பு; பலர் காணிகளை இழந்தனர்!

அம்பாறை, பெப். 13

**அம்பாறையின் கரையோர பிரதேசங்களில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பு காரணமாக பல நூற்றுக்கணக் கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருகின்றனர். அத்துடன், அங்குள்ள மீனவர்களும் தொழில் நடவடிக்கைகளில் பேரிடர்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.**

மருதமுனை, பாண்டிருப்பு, பெரிய நீலாவணை, சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை, நிந்தவூர், ஒலுவில், பொத்துவில் போன்ற பிரதேசங்களில் காற்றின் வேக அதிகரிப்பு, காற்றின் திசை மாற்றம், நீரோட்டத்தில் ஏற்பட்டுள்ள திசை மாற்றம், வழமைக்கு மாறான கடல் நீரின் குளிர்ச்சி, கடல் அலைகளின் கொந்தளிப்பு போன்ற காரணங்களால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அப்பகுதிகளில் வசிக்கும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறையில் ஒலுவில் தொடங்கி நிந்தவூர், காரைதீவு வரையிலான பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடலரிப்பால் 400 மீற்றர் தூரம் வரையிலான நிலப்பகுதிக்குள் கடல் நீர் புகுந்துள்ளதாலும், கடந்த சில தினங்களாக கடலரிப்பு ஏற்பட்டு வருவதாலும் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



காரைதீவு, நிந்தவூர் கரையோர பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக அதிகரித்து வரும் கடலரிப்பினை நிரந்தரமாக தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினர் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

எனினும், அம்பாறையின் கரையோர பிரதேசங்களில் கடலரிப்பு தீவிரமடைவதற்கு ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையே பிரதான காரணம் என அந்தப் பிரதேச மக்கள் நீண்ட காலமாக குற்றச்சாட்டு முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தொலைதொடர்பு கோபுரம் அமைப்பதற்கு எதிர்ப்பு!

வாழைச்சேனை, பெப். 13

வாழைச்சேனை மத்திய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடையில் வர்த்தக நிலையம் ஒன்றின் கட்டடத்தில் அமைக்கப்பட்டு வரும் தொலைத்தொடர்பு கோபுரத்தை நிறுத்தக் கோரி சனிக்கிழமை போராட்டம் நடத்தப்பட்டது.

மக்கள் செறிந்து வாழும் குறித்த பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதால் பொதுமக்களுக்கு புற்று நோய் மற்றும் சரும நோய்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவித்தே இந்த எதிர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.



குறித்த வர்த்தக நிலையத்தின் முன்பாக ஒன்றுகூடிய அப்பகுதி மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அத்துடன், அங்கு வந்த அதிகாரிகளிடம் மனுவையும் அவர்கள் கையளித்தனர்.

இது தொடர்பாக ஆராய்வதற்காக அந்தப் பணிகளை ஒரு வாரத்துக்கு நிறுத்துமாறு வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உத்தவிட்டுள்ளார். ஆய்வு முடிவை தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## குடும்பப் பெண்மீது கத்திக்குத்து தாக்குதல்!

திருகோணமலை, பெப். 13

திருகோணமலை - மஹதிவுல்வெவ பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் பெண்ணொருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பெண் மஹதிவுல்வெவ சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாய் எனவும் தெரியவருகின்றது.

பொலிஸார் விசாரணையில் குறித்த பெண் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தனது தாயாரை தாக்கினார் என்றும் இதையடுத்தே அந்தப் பெண்ணை கத்தியால் குத்தியதாகக் கூறி அதே இடத்தைச் சேர்ந்த 28 வயது நபர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வலம்புரி சங்கு விற்க முயன்ற இரண்டு சந்தேகநபர்கள் கைது

மட்டக்களப்பு, பெப். 13

மட்டக்களப்பு வைத்திய சாலை வீதியில் ஒருகோடி ரூபாய்க்கு மேல் பெறுமதியான இரு வலம்புரி சங்குகளை விற்பனைக்காக எடுத்துச் சென்ற இருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

கல்முனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலையடுத்தே இவர்கள் சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், வலம்புரி சங்குகளும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது.

சந்தேகநபர்களையும் சான்றுப் பொருளையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## கல்வி நிறுவனங்களுக்கு காதலர் தினமன்று பூட்டு!

கல்முனை மாநகர சபை

கல்முனை, பெப். 13

கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கி வருகின்ற அனைத்து தனியார் கல்வி நிலையங்களையும் காதலர் தினமான நாளை செவ்வாய்க்கிழமை பூட்டுமாறு மாநகர சபை அறிவுறுத்தியுள்ளது.

காதலர் தினமான நாளை, மாணவிகள் மீது பகிடிவதைகள் மற்றும் வேண்டத்தகாத ஒழுங்கீன சம்பவங்கள் இடம்பெறலாம் என்று சுட்டிக்காட்டி பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் விடுத்த வேண்டுகோளை கவனத்தில் கொண்டே இவ்வறிவுறுத்தல் விடுக்கப்படுவதாக மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ. எம்.றகீப் தெரிவித்தார்.

ஆகையால் அன்றைய தினம் எந்தவொரு தனியார் கல்வி நிலையதையும் திறக்காமல் ஒத்துழைப்பு அவர் கோரியுள்ளார்.

இதனை கண்காணித்து, உறுதி செய்யுமாறு மாநகர சபையின் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரையும் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அன்றைய தினம் தங்களது பிள்ளைகளை கல்வி நிறுவனங்களுக்கு அனுப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பெற்றோர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ - 06)

## கிழக்கு ஆளுநரின் கோரிக்கையை நிராகரித்தது ஜனாதிபதி செயலகம்

கொழும்பு, பெப். 13

கொழும்பில் தனது அலுவலகத்தை தொடர்ந்தும் பராமரிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி செயலகம் நிராகரித்துள்ளது.

ஆளுநர் கொழும்பில் அலுவலகம் ஒன்றை வாடகைக்கு 18 மாதங்களாக நடத்தி வந்தார். இது கடந்த வருட இறுதியுடன் காலாவதியானது.

இந்தநிலையில் கட்டடங்களை வாடகைக்கு விடுவதற்கான தடையை அறிவிக்கும் சுற்றறிக்கையை நிதியமைச்சகம் வெளியிட்ட பின்னர் குத்தகை ஒப்பந்தத்தை நீடிப்பது இனி சாத்தியமில்லை. எனினும் ”சிறப்பு ஒப்புதல்” மூலம் அலுவலகத்துக்கான குத்தகை ஒப்பந்தத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆளுநர் அலுவலகம் கேட்டுக் கொண்டது,

இதனால் ஆளுநர் திறம்பட தனது பணிகளைத் தொடர முடியும் என்றும் அந்த கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், ஜனாதிபதி அலுவலகம் இந்த கோரிக்கையை நிராகரித்துவிட்டது. (ஐ)

# அழிவிடத்திலும் கொள்ளை துருக்கியில் 48 பேர் கைது!

அங்காரா, பெப். 13

நிலநடுக்கத்தால் உருக்குலைந்த துருக்கியில் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துருக்கி மற்றும் சிரியா எல்லைப் பகுதிகளில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் அந்த நாட்டில் உள்ள மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு கட்டிடங்கள் தரைமட்டமாகின. இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகிறது. பலமுறை ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 28 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இந்த நிலையில், நிலநடுக்கத்தால் உருக்குலைந்த துருக்கியில் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டு 48 பேர் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கொள்ளை சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து பணம், நவீன கைபேசிகள், கணினிகள், நகைகள், ஏ. ரி. எம் அட்டைகள் மற்றும் ஆயுதங்கள் போன்றன பறிமுதல் செய்யப்பட்டன. (ஐ)

# மூன்றாவது மர்மப் பொருளை சுட்டு வீழ்த்தியது அமெரிக்கா!



ஒட்டாவா, பெப். 13

**வட அமெரிக்காவின் வான்பரப்பில் அடையாளம் தெரியாத பொருள் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. இதனை கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூட்டோ உறுதிப்படுத்தியுள்ளார்.**

வட அமெரிக்கா வின் வான்பரப்பில் சுட்டு வீழ்த்தப்பட்ட மூன்றாவது பொருள் இதுவாகும். அமெரிக்க இராணுவம் சீனாவுக்கு சொந்த மான பலூனை கடந்த வாரம் சுட்டு வீழ்த்தியது. இதைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை கார் அளவுள்ள மர்மப் பொருள் ஒன்றை அமெரிக்க படைகள் சுட்டு வீழ்த்தின.

இந்த நிலையில், நேற்று முன் தினம் சனிக்கிழமை கனடாவின் யூகோன் பகுதியில் வான் எல் லையில் மர்மப் பொருள் ஒன்று பறந்தது. சுமார் 40 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த இந்த மர்மப் பொருளை கனடா - அமெரிக் காவுக்கு சொந்தமான எவ் - 22 விமானங்கள் சுட்டு வீழ்த்தின. சுடப்பட்ட இந்தப் பொருள் சிறிய உருளை வடிவானது என்று கூறப்படுகின்றது.

வீழ்த்தப்பட்ட இந்த மர்மப் பொருளை சேகரித்து ஆய்வுக்கு உட்படுத்த படைகளுக்கு கனடா பிரதமர் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# துருக்கி - சிரியா நிலநடுக்கம் 28,000ஐ கடந்தது உயிரிழப்பு!



அங்காரா, பெப். 13

துருக்கி, சிரியா நாடுகளில் இடம்பெற்ற பூகம்பத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 28 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 80 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

கட்டிட இடிபாடுகளுக்குள் மேலும் பலர் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதிசயிக்கத்தக்க வகையில் சிலர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். எனினும், நிலநடுக்கம் ஏற்பட்டு 6 நாட்களை கடந்துள்ள நிலையில் உயிர் பிழைத்தவர்களை கண்டுபிடிப்போம் என்ற நம்பிக்கை குறைந்துள்ளதாக மீட்பு படையினர் கூறுகின்றனர்.

இதேவேளை, துருக்கியில் உணவு விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

துருக்கியில் 24 ஆயிரத்து 617 பேர் உயிரிழந்தனர் என்றும், 80 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர் என்றும் மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். (ஐ)

# ரஷ்யா - உக்ரைன் போர் நிறுத்தம்; இந்தியாவுக்கு ஆதரவு அளிப்போம்!

## அமெரிக்கா அறிவிப்பு



வாஷிங்டன், பெப். 13

“ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரை நிறுத்த இந்தியப் பிரதமர் மோடி எந்த முயற்சி எடுத்தாலும் அதை அமெரிக்கா வரவேற்கும்” என அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஷங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொள்ள ரஷ்ய ஜனாதிபதி புடின் வந்திருந்தபோது, அவரை பிரதமர் மோடி சந்தித்து பேசினார். அப்போது, “இன்றைய யுகம் போருக்கானது அல்ல. இதுகுறித்து நான் ஏற்கெனவே பேசியுள்ளேன். அமைதிப் பாதையில் எப்படி செல்லலாம் என்பதற்கான வாய்ப்புகள் தற்போது உள்ளன” என தெரிவித்தார்.

இதே கருத்தை உஸ்பெகிஸ்தான் சாமர்கண்ட் நகரில் நடந்த கூட்டத்திலும் பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

இந்தோனேசியாவின் பாலித்தீவில் ஜி-20 கூட்டறிக்கையில், இந்த கருத்து இடம் பெற்றிருந்தது. பிரதமர் மோடியின் இந்தக் கருத்தை உலக நாடுகள் வரவேற்றன.

இந்நிலையில் அமெரிக்கா வின் தேசிய பாதுகாப்பு சபை யின் செய்தி தொடர்பாளர் ஜோன் கிர்பி, “ரஷ்யா-உக் ரைன் போருக்கு அதிபர் புடின் தான் காரணம். அவரால் இப் போதுகூட போரை நிறுத்த முடியும். ஆனால், அவர் தொடர்ந்து உக்ரைன் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறார். இரு நாடுகள் இடையேயான விரோதம் முடிவுக்கு வர வேண்டும். பேச்சு நடத்த உக்ரைன் ஜனா திபதி ஜெலன்ஸ்கி தீர்மானிக்க வேண்டும்.

இந்தப் போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி முயற்சிக்கிறார். ஆனால், போரை நிறுத்த புடின் விரும்பாததால், நாங்கள் உக்ரைனுக்கு இராணுவ உதவி அளிக்க வேண்டியுள்ளது. இந்திய பிரதமர் மோடியால், புடினை சமாதானம் செய்ய முடியும். இதுகுறித்து பிரதமர் மோடியை மீண்டும் பேசும்படி கூறுவோம். உக்ரைன் போரை நிறுத்த அவர் எந்த முயற்சி எடுத்தாலும், அதை அமெரிக்கா வரவேற்கும் - என்றார். (ஐ)

# பாலியல் அடிமைகளாக சீன பெண்கள் ஐரோப்பிய நாடுகளில் பிடித்து வைப்பு!

மட்ரிட், பெப். 13

ஐரோப்பிய நாடுகளில் பல வீடுகளில் சீனாவின் இளம் பெண்கள் பாலியல் அடிமைகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு 200 பெண்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்று ஐரோப்பிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து மேலும் அறிய வருபவை வருமாறு,

இதுவரை பாதிக்கப்பட்ட 200 இளம்பெண்கள் மீட்கப்பட்டுள்ளனர். இணையம் வழியே சிறந்த வேலை, அதிக சம்பளம் என்று விளம்பரம் செய்து சீன இளம் பெண்களை கவர்ந்து இழுத்து, ஐரோப்பிய ஹோட்டல்களில் அவர்கள் பணியில் அமர்த்தப்படுகின்றனர். அங்கு கட்டாயமாக விபசாரத்தில் தள்ளியதுடன், அதன்பின் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் சுழற்சி முறையில் அவர்களை விபசாரத்தில் தள்ளியுள்ளனர்.

போலி வீசாக்கள் மூலமாக ஐரோப்பா வரவழைக்கப்பட்ட பெண்களே இவ்வாறு விபசாரத்தில் தள்ளப்பட்டுள்ளனர்.

3 ஆண்டுகளில் 200 பெண்கள் மீட்கப்பட்ட நிலையில் இவ்வாறு அடிமையாக்கப்பட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை பல மடங்கு இருக்கும் என்று கூறப்படுகின்றது. ஸ்பெயின், ஜேர்மனி, போலந்து மற்றும் சுவிற்சர்லாந்து நாடுகளில் இவ்வாறு சீனப் பெண்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

பணத்துக்காக சீனர்களே இளம் பெண்களை விற்பனை செய்யும் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிய வருகின்றது. (ஐ)

## மக்கள் தொகையில்

# இன்னமும் இரண்டு மாதங்களில் சீனாவை இந்தியா பின்தள்ளும்!



நியூயோர்க், பெப். 13

இன்னும் இரு மாதங்களில் மக்கள் தொகையில் சீனாவை இந்தியா முந்திவிடும் என்று ஐ. நா. நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

ஐ. நா. மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கிய 1950 முதல் உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக சீனா இருந்து வருகிறது. இந்த பெயரை அது இன்னும் இரு மாதங்களில் இழக்கும் என்றும், வரும் ஏப்ரலில் உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா உருவெடுக்க தெரிவித்துள்ளது.

ஐ. நாவின் அறிக்கை மற்றும் பிற அமைப்புகள் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் உதவியோடு ஆய்வு நிறுவனம் ஒன்றின் ஆய்விலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் 2011க்குப் பிறகு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. எனவே, அதன் உண்மையான மக்கள் தொகை தெரிய வில்லை.

எனினும், தோராயமாக இந்தியாவின் மக்கள் தொகை 140 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஒட்டுமொத்த ஐரோப்பாவை விட (74.4 கோடி) அதிகம் ஒட்டுமொத்த அமெரிக்காவைவிட(104 கோடி) அதிகம்.

சீனாவிலும் 140 கோடிக்கும் அதிகமாக மக்கள் இருக்கிறார்கள். என்றாலும், சீனாவில் மக்கள் தொகை பெருக்கம் குறைந்து வருகிறது. இந்தியாவில் அதிகரித்து வருகிறது. இதனால், வரும் ஏப்ரலில் சீன மக்கள் தொகையை விட இந்திய மக்கள் தொகை அதிகமாகும். வரும் 2030 இற்குள் இந்தியாவின் மக்கள் தொகை 150 கோடியாக உயரும். வரும் 2047 வரை இந்தியாவில் மக்கள் தொகை மெதுவாக உயர்ந்து கொண்டே இருக்கும் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# மகளிர் உலகக் கிண்ணம் ஆஸி., இங்கிலாந்து வெற்றி!






கேப்டவுன், பெப். 13

மகளிர் உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் இலகு வெற்றி பெற்றன.

தென்னாபிரிக்காவில் மகளிர் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் நடக்கிறது. இதில், நேற்று முன்தினம் நடந்த போட்டியில், நியூசிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள் மோதின.

இதில், ஆஸியின் அலிசா ஹீலி பெற்ற அரைச்சதம் அடித்து அசத்த, ஏஷ்லி கார்ட்னர் 5 விக்கெட்களை கைப்பற்றி அசத்தினார்.

முதலில் ஆடிய ஆஸி அணி, 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. இதில், அலிசா ஹீலி 38 பந்துகளில் 9 பௌண்ட்ரிகளுடன் ளுடன் 55 ஓட்டங்களையும் மெக் லெனிங் 33 பந்துகளில் 7 பௌண்ட்ரிகளுடன் 41 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களை விட எலிஸ் பெரி 22 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள் 2 சிக்ஸர்களுடன் 40 ஓட்டங்களையும் குவித்தார். நியூசிலாந்து பந்துவீச்சில் அமேலியா கேர், லீ த/ஹ/ஹ தலப 3 விக்கெட்களை கைப்பற்றினர்.

174 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 14 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது.

அமேலிய கேர் (21), பேர்னடின் பெசுய்டென்ஹூட் (14), ஜெஸ் கேர் (10) ஆகிய மூவரே 10 ஓட்டங்கள் அல்லது அதற்கு மேல் பெற்றனர்.

அவுஸ்திரேலிய பந்துவீச்சில் ஏஷ்லி கார்ட்னர் 5 விக்கெட்களையும் மெகான் ஷூட் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இதேவேளை, மேற்கிந்தியத் தீவுகளை 7 விக்கெட்களால் இங்கிலாந்து வென்றது. இதில், முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

அணித் தலைவி ஹேலி மெத்யூஸ் 43 ஓட்டங்களையும் ஷெமெய்ன் கெம்பெல் 34 ஓட்டங்களையும் பெற்றனர். ஹேலி மத்தியூஸூம் முன்னாள் அணித் தலைவி ஸ்டெஃபானி ரெய்லரும் ஆரம்ப விக்கெட்டில் 47 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். ஆனால், ரெய்லர் 3 ஓட்டங்களை மாத்திரமே பெற்றார்.

136 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 14.3 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 138 ஓட்டங்ளைப் பெற்று வெற்றியீட்டியது.

இங்கிலாந்து சார்பாக துடுப்பெடுத்தாடிய அனைவரும் வேகமாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைப் பெற்றனர். நெட் சிவர்-ப்ரன்ட் 30 பந்துகளில் 40 ஓட்டங்களையும் அணித் தலைவி ஹீதர் நைட் 22 பந்துகளில் 32 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர். அவர்கள் இருவரும் பிரிக்கப்படாத 4ஆவது விக்கெட்டில் 67 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இவர்களை விட ஆரம்ப வீராங்கனை சொஃபியா டன்க்லி 18 பந்துகளில் 34 ஓட்டங்களைப் பெற்றார். (ஐ)



# ஆஸியுடனான டெஸ்ட் உனாட்கட் விடுவிப்பு

புதுடில்லி, பெப். 13

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜெயதேவ் உனாட்கட் விடுவிக்கப்பட்டுள்ளார்.

போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்காக ஆஸி., இந்திய அணிகள் மோதுகின்றன. இந்தியாவில் இந்தத் தொடர் நடக்கிறது. இதில், முதல் போட்டியில் இந்தியா வென்றுள்ளது.

இந்த நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து இந்திய வேகப்பந்து வீச்சாளர் உனாட்கட் விடுவிக்கப்பட்டுள்ளார். ரஞ்சிக் கோப்பை இறுதிப் போட்டியில் சௌராஷ்டிரம் அணிக்காக உனாட்கட் விளையாடுவதால் விடுவிக்கப்படுகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்தத் தொடரில் பங்கேற்க இந்திய அணி சார்பில் சிராஜ், ஷமி, உமேஷ் யாதவ், ஜெயதேவ் உனாட்கட் ஆகிய 4 வேகப்பந்து பந்து வீச்சாளர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. தற்போது அதில் ஜெயதேவ் உனாட்கட் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# டெஸ்ட் கிரிக்கெட்டில் அஸ்வின் புதிய மைல்கல்!

நாக்பூர், பெப். 13

போர்டர் - காவஸ்கர் கோப்பை டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் இந்தியா, இனிங்ஸ் மற்றும் 132 ஓட்டங்களால் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது.

இந்தப் போட்டியில் அஸ்வின் 5 விக்கெட்களை சாய்த்து அபாரம் காட்டினார்.

அஸ்வினுக்கு எதிராக ஆஸி. இடதுகை துடுப்பாட்ட வீரர்கள் மிகவும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அஸ்வின் அபாரமாக பந்து வீசி முதல் இனிங்ஸில் 3 விக்கெட்டுகளும், இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்களும் எடுத்தார். மொத்தமாக முதல் டெஸ்டில் 8 விக்கெட்களை எடுத்து அசத்தினார். சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இதுவரை அஸ்வின் 31ஆவது முறையாக 5 விக்கெட்களை எடுத்துள்ளார்.

இந்தியாவில் மட்டும் இதுவரை 25முறை 5 விக்கெட்களை எடுத்துள்ளார். இதற்குமுன் இந்திய வீரர் அனில் கும்ப்ளே இந்தச் சாதனையை படைத்துள்ளார். கும்ளேவுடன் இந்த சாதனையை சமன் செய்துள்ளார் அஸ்வின்.

உலகளவில் முத்தையா முரளிதரன் 67முறை 5 விக்கெட்களை எடுத்து முதலிடத்தில் உள்ளார். ஷேன் வோர்ண் (37)இரண்டாமிடம். அஸ்வின் 7ஆவது இடத்தில் உள்ளார்.






# விரலில் கிறீம் பூசினார் ஜடேஜா அபராதம் விதித்தது ஐ. சி. சி!

நாக்பூர், பெப். 13

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் போது விரலில் கிறீம் தடவியதற்காக ரவீந்திர ஜடேஜாவுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி) அபராதம் விதித்துள்ளது.

நாக்பூரில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது. இதில், ஜடேஜா 7 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார்.

இந்நிலையில் 2ஆவது இனிங்ஸில், ரவீந்திர ஜடேஜா, முஹமது சிராஜிடம் இருந்து திரவம் போன்ற பொருளை வாங்கி தனது இடது ஆள்காட்டி விரலில் தடவினார். அந்த நேரத்தில் பந்தை கையில் வைத்திருந்தாலும், ஜடேஜா அதில் எதையும் தேய்க்கவில்லை.

இதுதொடர்பான காணொலிகள் சமூக வலைதங்களில் வெளியானது. இதைத் தொடர்ந்து ஜடேஜா பந்தை சேதப்படுத்தினார் என்று சமூக வலைதளங்களில் பலர் குற்றசாட்டுகளை முன்வைத்தனர்.

ஆனால், அவர் வலி நிவாரணி கிறீமையே விரலில் பூசினார் என்று தெரிய வந்தது. ஆனால், இதனை அவர் நடுவருக்கு தெரிவித்திருக்கவில்லை.

இதற்காக, அவருக்கு ஐ. சி. சி. அபராதம் விதித்துள்ளது. அதன்படி, ஜடேஜாவின் ஆட்டக் கட்டணத்தில் 25 சதவீதம் அபராதமாக வசூலிக்கப்படவுள்ளது. (ஐ)

# இந்தியாவுடனான டெஸ்ட் வோர்ணருக்கு பதில் ஹெட்



புதுடில்லி, பெப். 13

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரர் டேவிட் வோர்ணர் விளையாடுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியாய வென்றது. இதில், அவுஸ்திரேலிய அணி மோசமான தோல்வியை தழுவியது. இந்த நிலையில், இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் டேவிட் வோர்ணருக்கு பதிலாக டிராவிஸ் ஹெட் அணியில் சேர்க்கப்படவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரரான டேவிட் வோர்ணர் இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் ஓர் ஓட்டத்துடனும் இரண்டாவது இனிங்ஸில் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார்.

அவர் வெளிநாட்டு ஆடுகளங்களில் விளையாடும் போது அவருடைய மோசமான ஆட்டமே தொடர்கிறது. தொடக்க ஆட்டக்காரர்கள் சிறப்பான தொடக்கத்தை அளிக்காததால் பெரியளவிலான ஓட்ட இலக்கத்தை அவுஸ்திரேலியாவால் எடுக்க முடியவில்லை.

இதனாலேயே, வோர்ணருக்கு பதிலாக டிராவிஸ் ஹெட் அணியில் இணைக்கப்படவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி டில்லியில் நடைபெறவுள்ளது. (ஐ)

# இந்திய பிரதமரை சந்திக்க சந்தர்ப்பம் ஏற்படுத்தி தருக

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 13

**இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதற்கு உடனடியாக சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்துமாறு இந்திய இணை அமைச்சர் எல்.முருகன் மற்றும் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஆகியோரிடத்தில் கோரிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரே மேற்படி கோரிக்கை விடுத்ததுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்குவதற்கு இந்தியாவின் மேற்பார்வையுடன் பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறும் பரிந்துரைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வந்துள்ள இந்திய இணை அமைச்சர் எல். முருகன் மற்றும் அண்ணாமலை ஆகியோரை நேற்று முன்தினம் இரவு சந்தித்துப் பேசியபோதே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

அச்சமயத்தில், சுரேஷ் பிரேமச்சந்திரன், 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுலாக்க வேண்டும் என்பது இந்தியாவின் நீண்டகாலக் கோரிக்கையாக உள்ளது. ஆனால், தற்போது இலங்கையில் அதற்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்து வருகின்றன.

இதேநேரம், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் 1987ஆம் ஆண்டு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டதை அடுத்து அரசமைப்பில் உள்ளீர்க்கப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்துக்கும் தற்போது நடைமுறையில் காணப்படுகின்ற அதன் வடிவங்களுக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டினார்.

# கொள்ளையர் கும்பலில் ஐவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, பெப். 13

வீட்டுக்குள் நுழைந்து தம்பதியரை கட்டிப்போட்டுவிட்டு சுமார் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்த ஆறு பேர் குழுவில் ஐவர் கைதுசெய்யப்பட்டனர் என்று பண்டாரகமை பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகம, களனிகம படகெட்டி பகுதியில் சந்தேகநபர்களில் ஒருவரின் வீட்டில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொருட்களும் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் வெளிநாடு ஒன்றிலிருந்து திரும்பிய வீட்டின் உரிமையாளர், தனது மனைவி மற்றும் குழந்தையுடன் கதிர்காமத்துக்கு யாத்திரை சென்று 6ஆம் திகதி இரவு வீடு திரும்பிய சிறிது நேரத்தில், கூரிய ஆயுதங்களுடன் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் தம்பதியை கட்டி வைத்துவிட்டு இந்தக் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கடலில் நீராடிய மாணவன் மாயம்!

புத்தளம், பெப். 13

கடலில் நீராடியபோது அலை அடித்ததில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் காணாமல் போனார் என்று சிலாபம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - மட்டக்குளி கடல்சார் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் ரம்புக்கனை - பண்டாரவத்தையை சேர்ந்த மலித் திமந்த ஜயலத் (வயது 23) என்ற மாணவரே இவ்வாறு காணாமல் போனார்.

இவர் சுற்றுலாவுக்கு சிலாபம் சென்ற நிலையில், தங்கியுள்ள ஹோட்டல் அருகே கடலில் நீராடியபோதே காணாமல் போனார்.

காணாமல்போன மாணவரை கண்டுபிடிக்கும் நடவடிக்கை மீனவர்களின் உதவியுடன் முன்னெடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சிவனொளி பாத மலை சென்றவர் குழந்தையைப் பிரசவித்தார்!

ஹற்றன், பெப். 13

சிவனொளிபாத மலைக்கு நேற்று தரிசனத்துக்காக சென்றபோது பெண் ஒருவர் குழந்தையை பிரசவித்தார்.

இரத்தினபுரி - நல்லதண்ணி நகரில் இருந்து சிவனொளிபாத மலைக்கு தரிசனம் செய்ய மலை ஏறிக்கொண்டிருந்த வேளையில், ஊசி மலைப் பகுதியில் அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டது. இதையடுத்து அவருக்கு அங்கேயே குழந்தை பிறந்தது.

இதைத் தொடர்ந்து குடும்பத்தினர் பொலிஸாரின் உதவியுடன் அம்புலன்ஸ் வண்டி மூலம் டிக்கோயா கிளங்கன் ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

தாயும் சேயும் நலமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# விக்னேஸ்வரன் சந்தர்ப்பவாதி!

## சரத் பொன்சேகா சீற்றம்



கொழும்பு, பெப். 12

“இலங்கையில் வாழ முடியாவிட்டால் இங்கிலாந்தை நோக்கி ஓடச்சொல்லுங்கள்” – இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரனுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா.

வடக்கு மக்களுக்காக குரல் கொடுப்பதுபோல் பாசாங்கு செய்கின்றார். அவர் சந்தர்ப்பவாதி எனவும் அவர் குறிப்பிட்டார்.

“இலங்கையானது ஒற்றையாட்சி நாடாகும். இங்கு சமஷ்டிக்கு இடமில்லை. இங்கு வாழ முடியா விட் டால் அவரை இங்கி லாந்து போகச் சொல்லுங்கள். விக்னேஸ் வரன் சிங்கள பெண் ணையே திருமணம் முடிந்துள் ளார். அவர்களின் பிள்ளை களும் அப்படிதான். விக் னேஸ்வரன் தெற்கில் தான் படித்தார். தொழில் செய் தார். தற்போது வடக்கு மக்க ளுக்காக குரல் கொடுப்பது போல் பாசாங்கு செய்கின்றார். அவர் சந்தர்ப்பவாதி.” எனவும் பொன் சேனா குறிப்பிட்டார்.

சமஷ்டி தொடர்பிலும், மகாசங்கத்தினர் குறித்தும் க. வி. விக்னேஸ்வரன் வெளியிட்ட கருத்துகள் தெற்கு அரசியலில் பெரும் சொற்போரை ஏற்படுத்தியுள்ளது. பல தரப்பினரும் விக்னேஸ்வரனை விமர்சித்து வருகின்றனர். (அ)

# அரசாங்க நிறுவனங்களின் ஊடாக தேர்தலுக்கு தடை ஏற்படுத்த முயற்சி

## ஜீ. எல். பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 13

தேர்தல் நடவடிக்கைகளுக்கு சகல அரச நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அரச நிறுவனங்கள் ஊடாக தேர்தலுக்கு நெருக்கடிகள் ஏற்படுத்தப்படுகின்றன என்று சாடியுள்ளார் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ். அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பொதுஜன பெரமுன தரப்பினர் படுதோல்வி அடைவார்கள் என்றும் கூறினார்.

சுதந்திர மக்கள் சபையின் தலைமை பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரச நிறுவனங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அரச நிறுவனங்கள் ஊடாக தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு எரிபொருள் விநியோகிப்பது சிக்கலானது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது. பொலிஸ் மற்றும் படைத் தரப்பினர் தேர்தல்கால செலவுகளை பன்மடங்கு மதிப்பிட்டு தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது கடினம் என்று அரச நிறுவனங்கள் ஊடாக குறிப்பிடும் நிலையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. இலங்கை அரசியல் வரலாற்றில் இவ்வாறானதொரு தன்மை முன்னொருபோதும் இடம்பெறவில்லை. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதை தடுக்க அரசாங்கம் மேற்கொள்ள சூழ்ச்சிகள் இல்லை என்று குறிப்பிட வேண்டும். எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேர்தல் ஒழுங்குப்படுத்தல் சட்டம், கட்டுப்பணம் செலுத்தலை பொறுப்பேற்பதை தடுக்கும் வகையிலான சுற்றறிக்கை உள்ளிட்ட பல முறையற்ற செயல்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்தது.



ஆட்சியாளர்களின் தேவைக்கு ஏற்ப நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை தீர்மானிக்க முடியாது. அரசமைப் பின் பிரகாரம் தேர்தல் காலத்திற்கு காலம் நடத்தப்பட வேண்டும். நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை உயர் நீதிமன்றம் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை எமக்கு முழுமையாக உள்ளது - என்றார். (ஐ)

# பயணித்த எரிபொருள் தாங்கி வாகன சாரதி திடீர் மரணம்!

கொழும்பு, பெப். 13

பயணித்துக் கொண்டிருந்த எரிபொருள் தாங்கி வாகனத்தின் சாரதி திடீரென மரணமானார். இதனால், வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானது என்று நிட்டம்புவ தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த எரிபொருள் தாங்கி வாகனம் சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து டீசலை ஏற்றிக்கொண்டு கல்முனைக்கு சென்றது.

இதயநோயாளியான சாரதி வீதியில் வாகனம் பயணித்துக் கொண்டிருந்தபோதே திடீரென சரிந்து விழுந்தார். ஓடிக்கொண்டிருந்த வாகனம் உயர் அழுத்த மின்கம்பத்துடனும் அதனை அடுத்துள்ள இரு தென்னை மரங்களுடனும் மோதுண்டு நின்றது.

அந்த வாகனத்தில் இருந்து உதவியாளரும், சாரதியும் மீட்கப்பட்டனர். சோதனையில் சாரதி இதய நோயால் ஏற்கனவே உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

# 2024 முதல் தரம் 6 - 13 வரை புதிய பாடங்கள் அறிமுகம்!

## தொழில்நுட்பத்துக்கு முன்னுரிமை

கொழும்பு, பெப். 13

6 முதல் 13 வரையான அனைத்து தரங்களின் பாடத் திட்டமும் 2024 முதல் புதுப் பிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

8ஆம் தரத்தில் செயற்கை நுண்ணறிவை அறிமுகப்படுத்து வதற்கான பேச்சுகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

க.பொ.த. உயர்தரத்தில் மாணவர்கள் தகவல் தொழில் நுட்பத்துடன் பாடத்தைப் படிக்கும் வாய்ப்பைப் பெறு வார்கள் என்று அவர் குறிப் பிட்டார்.

கல்வி சீர்திருத்தங்களின் அடிப்படையான கல்வியை டிஜிற்றல் மயமாக்குவது தொடர்பான கொள்கையை அறிமுகம் செய்வதற்கு இரண்டு வாரங்களில் அமைச்சரவையின் அனுமதி பெறப்படும் என்று அமைச்சர் பிரேமஜயந்த சுட்டிக்காட்டினார்.

இளைஞர்களின் எதிர்காலம் தொழில்நுட்ப மேம்பாட்டில் தங்கியிருப்பதால், உயர்கல்வியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று அவர் தெரி வித்தார்.

தொழில்நுட்பத் துறையில் இலங்கையின் அதே மட்டத் தில் உள்ள நாடுகள் 10 வரு டங்கள் முன்னோக்கிச் செல்வ தாகத் தெரிவித்த அமைச்சர், எனவே அடுத்த ஐந்து வருடங்க ளுக்குள் அர்த்தமுள்ள கல்வி சீர்திருத்தங்களை எட்டுவது முக்கியம் என்றும் கல்வி அமைச்சர் கூறினார். (ஐ)

# டெங்கு நோயாளர் தொகை நாட்டில் திடீர் அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 13

நாட்டில் இந்த வருடத்தில் மட்டும் 7 ஆயிரத்து 647 டெங்கு நோயாளர்கள் பதிவாகி யுள்ளனர் என்று தொற்று நோயியல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தரவு களின்படி, ஜனவரி மாதத்தில் 6 ஆயிரத்து 497 டெங்கு நோயா ளர்கள் பதிவாகியுள்ள னர். இந்த மாதத்தில் 1,150 தொற் றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிக ளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த மாதம் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங் களில் இருந்து தலா ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் பதிவாகினர்.

மேலும் இந்த மாதத்தில் இதுவரை கொழும்பு மாவட் டத்தில் 218 டெங்கு நோயாளர் களும், புத்தளத்தில் 172 தொற்றாளர்களும் மற்றும் கம்பஹா மாவட்டத்தில் தொற்றாளர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள் ளனர்.

அதிகளவான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர் என்று தொற்றுநோயியல் திணைக் களம் மேலும் தெரிவித்துள் ளது. (ஐ)

# நீதிவானை மாடியில் பூட்டிவிட்டு அவரின் கார் கொள்ளையிடப்பட்டது

கொழும்பு, பெப். 13

நீதிவான் ஒருவரின் வீட்டை வாங்கும் போர்வையில் சென்றவர் அவரை வீட்டின் மாடியில் அறையில் வைத்துப் பூட்டிவிட்டு கீழே நிறுத்தி வைக்கப்பட் டிருந்த காரை திருடிச் சென்றுள்ளார்.

கொழும்பு - பிலியந்தலை பிரதேசத் தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீதிவான் தனக்கு சொந்தமான இரண்டு மாடி வீடு விற்பனைக்கு உள்ளதாக இணையத்தில் விளம்பரம் வெளியிட்டிருந்தார். இதன்பிரகாரம், வீட்டை வாங்குபவரை போல வந்தவர் இந்தக் கொள்ளை சம்பவத்தை மேற்கொண்டுள்ளார்.

விளம்பரத்தில் பதிவிடப்பட்டிருந்த தொலைபேசி இலக்கத்துக்கு கொள்ளையன் அழைப்பேற்படுத்தி, வீட்டைப் பார்க்க வருவதாகத் தெரிவித்துள்ளார். அவருக்கு வீட்டைக் காண்பிப்பதற்காக நீதிவான் தனியாக காரில் வந்துள்ளார்.

வீட்டின் முன் காரை நிறுத்திய நீதிவான், இரண்டு மாடி வீட்டின் கீழ் தளத்தின் பிரதான கதவை திறந்து, வீட்டின் ஒவ்வொரு பகுதியையும் காட்டினார். வீட்டின் கீழ் தளத்தின் உள்ள சமையலறையில் கார் சாவியை வைத்துள்ளார்.

இருவரும் வீட்டின் மாடி பகுதியை பார்க்க சென்றுள்ளனர். மேல்மாடி பல்கனியைக் காட்ட நீதிவான் கதவைத் திறந்து பல்கனிக்குள் நுழைந்தவுடன், மற்றைய நபர் கதவை மூடிவிட்டு கீழே ஓடியுள்ளார்.

சமையலறையில் வைக்கப்பட்ட காரின் சாவியை எடுத்து, காரை இயக் கிக் கொண்டு தப்பியோடி விட்டார்.

பின்னர் நீதிவான் பல்கனியில் இருந்து குதித்து கீழ் தளத்திற்குள் நுழைந்து சம்பவத்தை உறவினர்களுக்கு தெரிவித்ததுடன், பொலிஸாருக்கும் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## தேர்தலை...

ஒத்துழைப்பு தரவில்லை. இவற்றுக்கு எதிராக உயர்நீதி மன்றை நாட வேண்டி யிருக்கும் என்று தேர்தல் ஆணைக்குழு வின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரி வித்துள்ளார். (ஐ)

## தேர்தல்...

நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டு விநியோகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## நெல்லின்...

இன்று பலர் பொருளாதார நெருக் கடியில் தவித்து வருகின்றனர். விளைச்சல் அதிகரித்தாலும் அரிசி வாங்குவதற்கு பொருளாதார பலம் இல்லாத பிரிவினர் உள்ளனர். எனவே, மார்ச், ஏப்ரல் மாதங்களில் இருபது இலட்சம் குடும்பங்களுக்கு 10 கிலோ கிராம் அரிசியை இலவசமாக வழங்கும் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறோம்.

தற்போது ஒரு ஹெக்ரெயருக்கு சுமார் 3 மெற்றிக் தொன் நெல் கிடைக்கி றது. நாம் செயல்படுத்தி வரும் விவசா யத்தை நவீனமயமாக்கும் திட்டத்தின் மூலம் ஒரு ஹெக்ரெயருக்கு குறைந்தது ஆறு மெற்றிக் தொன் அறுவடை பெற வேண்டும். முடியுமானால், அதனை 7 மெற்றிக் தொன்களாக உயர்த்த எதிர் பார்க்கிறோம் - என்றும் கூறினார். (ஐ)

## 2.5லட்சம்...

ரீதியில் 37 சதவீதமானோர் உணவுப் பாதுகாப்பின்மை நிலைக்கு முகங் கொடுத்துள்ளனர். இதற்காக ஆரம்பித்த செயல்திட்டத்தில் 18 இலட்சம் மக்க ளுக்கு அவசியமான உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

குறிப்பாக, உலக உணவுத் திட்டத் தினால் 1470 மெற்றிக் தொன் அரிசி நாடளாவிய ரீதியிலுள்ள 7,593 பாடச ாலைகளுக்கு பகலுணவு தயாரிப்பதற் காக பகிர்ந்தளிக்கப்பட்டது. அத்துடன் அதன் மூலம் சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான (1,050,714 மாணவர்கள்) பாடசாலை மாணவர்கள் பயனடைந் திருக்கின்றார்கள்.

மேலும், உணவுப் பாதுகாப்பின்மை நெருக்கடி உயர்வாக உள்ள பகுதிகளில் வாழும் 2 இலட்சத்து 85 ஆயிரத்து 776 பேருக்கு அவசியமான உணவுப்பொருட் கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், மேலும் 7 இலட்சம் பேருக்கு எதிர்வரும் மாதங்களில் அந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், பெப்ரவரி - மே வரை யான காலப்பகுதியில் 2 இலட்சத்து 44 ஆயிரம் பேருக்கு அவசியமான நிதியுத விகளை வழங்க உலக உணவுத்திட்டம் தீர்மானித்துள்ளது. ஏற்கனவே 4 இலட்சத்து 89 ஆயிரம் பேருக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டி ருக்கும் இலங்கைக்கு உதவ பல நாடு களிலிருந்து உலக உணவுத் திட்டத்துக்கு 4.75 கோடி டொலர் நிதி கிடைக்கப் பெற்றுள்ளது - என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# உருளை கிழங்குக்கு விசேட வரி!



கொழும்பு, பெப். 13

இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்குக்கு வரி விதிக்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது. இன்று திங் கட்கிழமை நடைபெறவுள்ள அமைச்சர வைக் கூட்டத்தில் இது தொடர்பான விடயங்களை ஜனாதிபதியிடம் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டில் உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளையும் உள்ளூர் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையையும் பாது காக்கும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், நாட்டில் விதை உரு ளைக்கிழங்கு உற்பத்தி வருடாந்தம் 90 இலட்சம் கிலோவாக அதிகரிக்கப்பட் டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சுற்றுலா...

தோணியிலிருந்த ஓட்டை வழியாக படகில் நீர் நிரம்பவே அவர்கள் உதவி கேட்டு சத்தமிட்டனர்.

மாணவர்களின் உதவிக் குரலைக் கேட்டு அவர்களை காப்பாற்ற ஆசிரியர் நீந்திச் செல்ல முயன்றார். இந்தச் சமயத்தில் நால்வரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தில், யோ. கிவேதன் (வயது 27), தயாபரன் சஜித்தன்(வயது - 16), சத்தியசீலன் தனு (வயது - 16), வீரசிங்கம் விதுசன் (வயது - 16) ஆகி யோரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந் தனர். (ஐ)

## பிரதமர்...

அதில், பொதுஜன பெரமுனவில் நான் கட்சித் தலைவர். இந்தக் கட்சியின் தலைமையிலான கூட்டணியின் தலைவரும்கூட.

எனவே, கட்சி எடுக்கும் தீர்மானத் துக்கு தலை வணங்குவதே எனது கொள்கை என்று கூறியுள்ளார்.

இதேநேரம், தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன தனது கடமை களை சிறப்பாக செய்து வருகிறார். அவரை பதவியிலிருந்து நீக்க எந்தக் காரணமும் இல்லை என்றும் அவர் கூறி யுள்ளார். (ஐ)

# போதைப்பொருள் கடத்தல்காரி கைது!

கொழும்பு, பெப். 13

பிரபல போதைப்பொருள் வியாபாரி யான "குடு சுமங்கலி" என்ற பெண் 50 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதி யான ஹெரோயினுடன் கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் மஹவத்த பிரதேசத் தில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 208 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெ டுத்துள்ளனர். (ஐ)

## இனப்பிரச்சினை...

போதும், மூன்று தசாப்தங்களாக அதை நடைமுறைப் படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவில்லை.

தற்போது கூட 13ஆவது திருத்தச்சட் டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைமுறைப்படுத்துவதாக அறிவித்த சொற்ப காலத்துக்குள்ளேயே பௌத்த பிக்குகள் அதற்கு எதிராக போராட் டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

ஆகவே, ரணில் விக்கிரமசிங்க எதிர்காலத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த நடவடிக்கைகளை முன்னெடுப் பார் என்று எதிர்பார்க்க முடியாது. அத்துடன், அவரின் செயல்பாடுகளும் இரட்டைத் தன்மை கொண்டவை யாகவே உள்ளன.

இவ்வாறான நிலையில் எம்மைப் பொறுத்தவரையில், 13ஆவது திருத்தச் சட்டத்தினை அரசியல் அபிலாசை களுக்கான தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, நாம் சமஷ்டி அடிப்படையிலான தீர்வைப் பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக் கின்றோம். அதற்காகவே எமது மக்க ளும் தொடர்ச்சியாக ஆணை வழங்கி வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில், அவ்வித மானதொரு தீர்வுப்பொதியை கூட்டுப் பொறிமுறை ஊடாகவே தீர்மானிக்க முடியும். அந்த தீர்வுப்பொதியை தயாரிப்பதற்காக வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல், சிவில் சமூக பிரதிநிதிகள், தமிழகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள், புதுடில்லியின் அதிகாரிகள் மற்றும் புலம்பெயர் தேசத் தில் செயற்படும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டி யுள்ளது. இவ்விதமான செயற்பாடு ஒன்றை முன்னெடுப்பதற்கு தாங்கள் எதிர்காலத்தில் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சமஷ்டித் தீர்வைக் கேட்காதீர்கள் ஒருபோதும் நிறைவேற்ற முடியாது!

## தமிழரை கேட்கிறார் இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, பெப். 13

**தயவுசெய்து சமஷ்டி தீர்வைக் கேட்க வேண்டாம் என்று தமிழ்த் தலைவர்களிடம் சொல்கின்றோம். ஒருபோதும் சமஷ்டி தீர்வை நிறைவேற்றவே முடியாது என்று கூறியிருக்கிறார் இராஜாங்க அமைச்சர் கே. டபிள்யூ. சாந்த பண்டார.**



வடக்கு - கிழக்குதமிழ் மக்கள் அன்றிலிருந்து இன்று வரை கேட்பது அரசியல் தீர்வைத்தான். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கு செல்கின்றபோது தமிழ் மக்கள் அரசியல் தீர்வு கோரி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், ஒற்றையாட்சிக்குள் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது என்றும், நாட்டைப் பிரிப்பதற்கு இடமளிக்கமாட்டாது என்றும் ஜனாதிபதி கூறி வருகின்ற போதிலும் சிலர் ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் தீர்வுக்கு எதிராகவும் பேசி வருகின்றனர்.

தமிழ்த் தலைவர்களிடம் ஒன்று கூற விரும்புகிறோம். தயாவு செய்து சமஷ்டி தீர்வை கேட்காதீர்கள். அதனை நாம் கடுமையாக எதிர்க்கிறோம். ஒருபோதும் சமஷ்டி தீர்வை நிறைவேற்றவே முடியாது. தமிழர் தலைவர்கள் உண்மையில் தீர்வை விரும்பவில்லை. தீர்வு கிடைத்து விட்டால் அவர்களால் அரசியல் செய்ய முடியாது. இதனால்தான் அவர்கள் வழங்கப்பட முடியாத சமஷ்டி தீர்வைக் கேட்கிறார்கள். நாம் ஒற்றையாட்சிக்குள் தீர்வை வழங்கத் தயார்.

அரசு தேர்தலை ஒத்திப்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. பொருளாதாரப் பிரச்னை என்று வரும்போது அது இந்த நாட்டுக்கு மட்டும் உரியது அல்ல. முழுநாட்டிலும் உள்ளது. இங்கிலாந்தில்கூட இப்போது வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்துள்ளது.

இப்போது எமது நாட்டில் பொருளாதாரப் பிரச்னை கொஞ்சம் கொஞ்சமாகத் தீர்ந்து கொண்டு வருகின்றது. இந்த வருட இறுதிக்குள் நாம் ஒரு நல்ல நிலைக்கு வந்து விடுவோம். மக்கள் அனைவரும் எமது இந்த வேலைத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார். (ஐ)

# யாழிலிருந்து கஞ்சா கடத்தல் கொழும்பில் ஒருவர் கைதானார்!

கொழும்பு, பெப். 13

தேங்காய் விற்பனை என்ற போர்வையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு கடத்தப்பட்ட 15 கிலோ கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியதுடன், ஒருவரை கைது செய்துள்ளனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட போதைப் பொருள் கடத்தல் குற்றவாளியான மாகதுரே மதுஷின் குழுவை சேர்ந்த வரே கொழும்பு - நவகமுவை என்ற இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மதுஷுடன் டுபாயில் முன்னர் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர் என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர்.

கைதானவர், சிறிய லொறியில் தேங்காய் விற்பனை என்ற போர்வையில் யாழ்ப்பாணத்திலிருந்து கஞ்சாவை கொழும்புக்கு கடத்தி வந்துள்ளார் என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இளம் குடும்பஸ்தர் உறங்கிய நிலையில் சடலமாக மீட்பு!

கிளிநொச்சி, பெப். 13

கிளிநொச்சியில் உறக்கத்திலிருந்த நிலையிலேயே இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டார்.

அம்பாள் குளத்தை சேர்ந்த முருகன் இரத்தினகுமார் என்ற 36 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இவர், வழமைபோன்று மேசன் வேலையினை முடித்துவிட்டு வீட்டில் படுத்து உறங்கிய நிலையில் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டார்.

இவரின், மனைவி, பிள்ளைகள் உறவினர் வீடு ஒன்றுக்கு சென்றிருந்தனர். இதனால் வீட்டில் தனியாக உறங்கியிருந்தார். இந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டார்.ய

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

வடமராட்சி, பெப். 13

தொண்டைமானாறில் தோட்ட கிணறு ஒன்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அண்ணா சன சமூக நிலையம், கெருடாவில் தெற்கு தொண்டைமானாறைச் சேர்ந்த ஆ. பாலசிங்கம் (வயது- 71) என்பவராவார்.

வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் உள்ள தோட்டக் கிணற்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

# மலையகம் - இந்தியா இடையே உறவுப்பாலமாக நான் இருப்பேன்!

## இ. தொ. காவிடம் அண்ணாமலை உறுதி

கொழும்பு, பெப். 13

மலையகத்தில் இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் தனி வீடுகள் திட்டத்தை விரைவுபடுத்தல் மற்றும் மலையகத்துக்கு சகல வழிகளிலும் உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு மலையக மக்களுக்கும் இந்திய மத்திய அரசுக்கும் இடையில் ஓர் உறவுபாலமாக செயற்படுவேன் என பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் கு. அண்ணாமலை கூறினார்.

நேற்று முன்தினம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினரை அண்ணாமலை சந்தித்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, இலங்கை கடும் நெருக்கடியை எதிர்கொண்டிருந்த நிலையில், முதல் நாடாக உதவிய இந்தியாவுக்கு காங்கிரஸ் சார்பிலும், மலையக மக்கள் சார்பி லும் நன்றி தெரிவிக்கப்பட்டதாக தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளர் மருதபாண்டி ரமேஷ்வரன் தெரிவித்தார். (ஐ)

# பொலிஸ் கேட்டது 280 கோடி ரூபாய் தேர்தல் குழு கொடுத்தது 5 கோடி!

கொழும்பு, பெப். 13

உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பான செலவுகளுக்கு பொலிஸார் கோரிய 280 கோடி ரூபாயில் 5.3 கோடி ரூபாயே பொலிஸாருக்கு கிடைத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பான பொலிஸாரின் செலவுகளுக்காக தேர்தல் ஆணைக் குழுவிடம் பொலிஸார் 280 கோடி ரூபாயை கோரியிருந்தனர். இதில், 5.3 கோடி ரூபாயே வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இது முற்கொடுப்பனவு தொகை என்ற போதிலும், தேவையான செலவுகளுக்குப் போதாது. எனவே, வேறு ஒரு பகுதியை விடுவிக்கக் கோருவதற்கு பொலிஸ் தலைமையகம் முடிவு செய்துள்ளது.

பொலிஸ் கோரிய செலவு தொகையில் வாகனங்களை வாடகைக்கு எடுப்பதற்கே அதிக செலவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 74. 5 கோடி ரூபாய் கோரப்பட்டுள்ளது.

எரிபொருளுக்காக 67. 5 கோடி ரூபாயும் அதிகாரிகளின் கூட்டு கொடுப்பனவுகள், தங்குமிட கொடுப்பனவுகள், ஊக்கத் தொகைகள் மற்றும் சிறப்பு கொடுப்பனவுகளுக்காக மேலும் 50 கோடி ரூபாயும் தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-சி)

## மரண அறிவித்தல்



**சிவப்பிரகாசம் மகேந்திரராசன்**

யாழ். புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் மகேந்திரராசன் கடந்த 06-02-2023 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சிவப்பிரகாசம்(இலங்கை), இராசமணி(பிரான்ஸ்) தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற ஆறுமுகம்(இலங்கை) - அன்னலட்சுமி(இலங்கை) தம்பதியரின் அன்பு மருமகனும், விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மகிந்தன்(பிரான்ஸ்), மகிழன்(பிரான்ஸ்), மதுர்சன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபா(பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரும், சாய்ஷா(பிரான்ஸ்) அவர்களின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி(இலங்கை), குமுதா(இலங்கை) மற்றும் மகேஸ்வரி(பிரான்ஸ்), சாந்தினி(பிரான்ஸ்), அருட்செல்வி(பிரான்ஸ்), பாலச்சந்திரன்(பிரான்ஸ்), பரமேஸ்வரன்(லண்டன்), ரங்கநாதன்(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவலிங்கம்(இலங்கை), சிவபாலன்(பிரான்ஸ்), உதயன்(பிரான்ஸ்), அருட்செல்வி(பிரான்ஸ்), உதயகுமார்(கனடா), மைதிலி(இலங்கை), சூரயகுமார்(இலங்கை) அருட்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகேஸ்வரன் (இலங்கை), சந்திரமலர்(பிரான்ஸ்), ஹவாசம்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு அண்ணனும், சுமதி(இலங்கை), சுரேந்திரன்(பிரான்ஸ்), லக்சுமி(பிரான்ஸ்), சுகந்தன்(பிரான்ஸ்), சுதர்சன்(பிரான்ஸ்) ஆகியோரின் அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.02.2023) திங்கட்கிழமை நண்பகல் 1.00 மணியளவில் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.